Registered as a Newspaper in Ceylon ★ விலை சதம் 10

# ஈழநாடு

EELA NADU

ஈழநாடு
சந்தா விபரம்
வாரப்பதிப்பு உட்பட
ஒரு வருடத்துக்கு ரூபா 40-00
6 மாதத்துக்கு ரூபா 21-00
3 மாதத்துக்கு ரூபா 11-00

போன் 389 National Tamil Daily தேசிய தினசரி தபாற் பெட்டி எண் 49

மலர் 5 யாழ்ப்பாணம் சோபகிருது சித்திரை 19 ஆம் நாள் துல்ஹஜ் 7 (2-5-63) வியாழக்கிழமை இதழ் 82

# "சகல மக்களுக்கும் சம உரிமை அளிக்கவும் அரசியல் திட்டத்தில் உறுதிப்படுத்த வேண்டும்"

## ஹட்டனில் இ. தொ. கா. மேதினக் கூட்டத் தீர்மானங்கள்

ஹட்டன், புதன்

**இந்த நாட்டில் நிரந்தரமாக வாழும் சகல மக்களுக்கும் வாழ்க்கையின் எல்லாத் துறைகளிலும் சம உரிமையும் சம சந்தர்ப்பமும் அரசியல் திட்டத்தின்மூலம் உத்தரவாதம்அளிக்க வேண்டுமெனக் கோரும் தீர்மானமொன்று இன்று இங்கு நடைபெற்ற இலங்கைத் தொழிலாளர் காங்கிரசின் மேதினக் கூட்டத்தில் ஏகமனதாக நிறைவேறியது.**

இ. தொ. கா. தலைவர் திரு எஸ். தொண்டமான் தலைமையில் மேதினக் கூட்டம் இங்கு நடைபெற்றது. ஜில்லாப் பிரதிநிதிகள் எல்லோரும் மற்றும் பொது மக்களும் திரண்டு வந்திருந்த இக்கூட்டம் ஆரம்பமாவதற்கு முன் 'பிரின்ஸஸ்' தியேட்டர் சந்தியிலிருந்து தொழிலாளர்களின் ஊர்வலம் ஒன்று வந்து சேர்ந்தது. ஊர்வலத்தில் தொழிலாளர்கள் சுலோகங்களைக் கோஷித்துக் கொண்டும் ஆடிப்பாடியும் வந்தனர்.

கூட்டத்தில் திரு. தொண்டமானும் மற்றும் காங்கிரஸ் பிரமுகர்களும் பேசிய பின் மூன்று தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

நாட்டின் ஐக்கியம், சமாதானம், முன்னேற்றம் ஆகியவைகளின் நலனைக் கருத்தில் கொண்டு பொதுவாக இந்த நாட்டிலுள்ள இன, மொழிச் சிறுபான்மையினருக்கு இழைக்கப்பட்ட வசதிக்குறைவுகளையும் குறிப்பாக தோட்டத் தொழிலாளர்களுக்கு அவர்களுடைய பிரஜாவுரிமை, கல்வி, வாக்குரிமை, வேலைவாய்ப்பு ஆகியவை சம்பந்தமாக இழைக்கப்பட்ட அநீதிகளையும் உடனடியாக நீக்கும்படி அரசாங்கத்தை, இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் இந்த மேதினக் கூட்டம் கேட்டுக்கொள்ளும் அதே சமயம், இந்த நாட்டில நிரந்தரமாக வாழும் சகல மக்களுக்கும் வாழ்வின் எல்லாத் துறைகளிலும் சம உரிமையும் சமசந்தர்ப்பமும் அரசியல் திட்ட ரீதியாக உத்தரவாதமளிக்கும்படியும் இந்த மே தினக் கூட்டம் அரசாங்கத்தைக் கேட்டுக்கொளகிறது" என்னும் தீர்மானம் கூட்டத்தில் நிறைவேறியது,

### போராட்டத்துக்கு தயாராகவேண்டும்

இந்நாட்டின் பொருளாதார வளத்தைப் பெருக்குவதற்குத் தோட்டத் தொழிலாளர் ஈட்டிய பெரும் பங்கை வலியுறுத்தும் அதே சமயம் தங்கள் அடிப்படை உரிமைகளைப் பாதுகாப்பதற்கும், தங்கள் சுதந்திரத்தைப் பாதிக்கக் கூடியதாக எடுக்கப்படும் நடவடிக்கைகளைத் தவிர்க்கவும் அவசியப்படும் போது போராட்டம் நடத்துவதற்கு தைரியத்துடனும் நம்பிக்கையுடனும் முன்னிற்பதற்குத் தொழிலாளர்கள் தங்களைத் தயார் செய்து கொள்ள வேண்டும் என்று இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் இந்த மே தினக்கூட்டம் கேட்டுக் கொள்கிறது என்னும் தீர்மானமும் கூட்டத்தில் நிறைவேறியது.

நிபுணர்கள், தொழிலாளர்கள், குடிமக்கள் ஆகிய எல்லோரின் சக்திகளையும் ஒன்று சேர்த்து சமூகத்தின் உல்லாசப் பிரிவினரும் ஒத்துழைப்புத்தருகின்ற அபிவிருத்தித் திட்டமொன்றை உருவாக்கும் படியும் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் மே தினக் கூட்டம் அரசாங்கத்தைக் கேட்டுக் கொண்டது.

கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட மற்றொரு தீர்மானம் இலங்கையிலுள்ள முதலாளிமாரைப் பொதுவாகவும் குறிப்பாகத் தோட்ட முதலாளிமார் சம்மேளனத்தையும் தற்காலத்திற்கேற்ற தொழிற்கொள்கையைப் பின் பற்றும் படி கேட்கிறது. சர்வதேச தொழில் ஸ்தாபனத்தின் நோக்கங்களுக்கும் அடிப்படைகளுக்கும் அமைய, நியாயமான கொள்கையாயிருப்பது சிறந்தது என அத்தீர்மானத்தில் கூறப்பட்டுள்ளது.

# அரசாங்கத்துக்கு ஒத்துழைப்புத் தருக!

## சகல மக்களுக்கும் தொழில் மந்திரி வேண்டுகோள்

கொழும்பு, புதன

"சகல சமூக மக்களும் நாட்டின் அபிவிருத்தியைக் கருத்தில் கொண்டு அரசாங்கத்துக்கு ஒத்துழைப்பு அளிக்கவேண்டும்" என்று தொழில் தேசிய சேவைகள் மந்திரி திரு. எம்.பி டி. ஸட்.சிறிவர்த்தன மேதினத்தை யொட்டி விடுத்த செய்தியில் கேட்டுக் கொண்டார்.

மந்திரி சிறிவர்த்தன தனது செய்தியில் மேலும் குறிப்பிட்டிருப்பதாவது:

"எல்லா மக்களும் அரசாங்கத்திற்கு பூரண ஒத்துழைப்பு நல்குவார்கள் என நான் எதிர்பார்க்கிறேன், சமூக நலன் கருதி மக்கள் உழைப்பது அவசியம். எமது கலாச்சாரத்திற்கும் பண்பாட்டிற்கும் ஏற்ற வகையில் மேதினம் அமைந்திருக்கிறது. மேதினம் தொழிலாளர் விடுமுறையாக்கப்பட்டுள்ளது ஏற்றதொன்றாகும். தேசவிருத்திக்கு பல சமூகத்தைச் சேர்ந்த மக்களின் ஒற்றுமை அவசியம். சமூகங்கள் உண்மையாகவே ஒத்துழைத்தால் அவர்கள் தங்களுக்கு மட்டுமல்ல பின் சந்ததியினருக்கும் நன்மை செய்தவர்கள் ஆவார்கள். சமூக நலன் கருதி அரசாங்கம் உழைத்துவருவதை சிலர் கண்மூடித்தனமாக கண்டித்து வருகிறார்கள். அரசாங்கத்தை இவ்விதம் கண்டிப்பது சமூக முன்னேற்ற விரோதிகளுக்கு ஆதரவளிப்பதாக முடியும். எமது அரசாங்கத்திற்கு மக்கள் வேண்டிய உதவி அளிப்பார்கள் என நான் மனப்பூர்வமாக நம்புகிறேன்."

## 717 தபால் தந்திகள்!

யாழ்ப்பாணம், வியாழன்

யாழ்ப்பாணம் பெரிய தபாற் கந்தோருக்கு நேற்றும் 717 தந்திகள் தபாலில் வந்துள்ளன.

தந்திகள் 24 மணித்தியாலங்களுக்குள் கிடைக்கச் செய்ய வேண்டுமென்றும், நடைமுறையிலுள்ள சட்டப்படி தாமதப்பட்டு விநியோகிக்கப்பட்டால் அத்தந்திச் செலவை அறவிடும் உரிமை உண்டென்பது பார்லிமெண்டில் எடுத்துக் காட்டியபின் தந்தியைப் பெற்றவர்கள் தந்தியை அனுப்பியவர்களுக்கு திருப்பி அனுப்பும் முயற்சியில் ஈடுபட்டிருப்பதாகத் தெரிகிறது.

## புதிய சமாதான நீதிபதி

யாழ்ப்பாணம், புதன்

சில்லாலை பிரபல வைத்திய குடும்பத்தைச் சேர்ந்த டாக்டர் எஸ். பாக்கியநாதர் அந்தனுசியார் யாழ்ப்பாண மாவட்டத்திற்கு சமாதான நீதிபதியாக அண்மையில் அரசாங்கத்தால் நியமிக்கப்பட்டார்.

இவர் தற்போது சில்லாலை ஐக்கிய நாணயசங்கத்தின் அக்கிராசனராகவும், கிராம முன்னேற்றச் சங்க பொருளாளராகவும், பண்டத்தரிப்பு அரசினர் வைத்தியசாலையின் உத்தியோகப்பற்றற்ற தரிசகராகவும் பணிசெய்து வருகிறார்.

## மேதின ஊர்வலம்

யாழ்ப்பாணம், வியாழன்

குளப்பிட்டிச் சந்தியிலிருந்து எழுதுவினைஞர் சங்க ஆதரவிலான மேதின விழாவுக்கான ஊர்வலம் புறப்பட்டு நகரமண்டபத்தை அடைந்தது. சாவகச்சேரி எம். பி. வி. என். நவரத்தினம், வட்டுக்கோட்டை எம். பி. திரு. அ. அமிர்தலிங்கம், இலங்கைத் தொழிலாளர்கழக உபதலைவர் திரு. க. அ. இராமன், தமிழ் எழுதுவினைஞர்சங்க செயலாளர் திரு. இ. பாலசுப்பிரமணியம், அஞ்சல் எழுதுவினைஞர் சங்கத்தலைவர் கனகசபை முதலி, வடமாகாண இ.போ. சபைத் தொழிலாளர் சங்கத்தைச் சேர்ந்த திரு. கதிரவேற்பிள்ளை ஆகியோர் தலைமையில் இவ்வூர்வலம் பல கோஷ்டிகளிடையே விழாமண்டபத்தை வந்தடைந்தது.

# தமிழ் தொழிலாளர்கள் சவாலாக ஏற்பர்!

## மேதினக் கூட்டத்தில் தலைமையுரை

யாழ்ப்பாணம், வியாழன்

"தமிழ் பேசும் தொழிலாளர்களை அரசாங்கம் நசுக்கி, இன்னல்படுத்தி அவர்களை அனாதைகளாக ஆக்குமளவிற்குத் தீவிரச் செயல்களில் ஈடுபட்டால் அதனைத் தமிழ் மக்கள் சார்பாகத் தமிழ்த் தொழிலாளர்கள் சவாலாக ஏற்றுக்கொள்கிறார்கள் என்பதனை அரசாங்கத்துக்குத் தெரிவித்துக்கொள்ளுகிறோம். எம்மைக் கொடுமைப்படுத்தி வகுப்புவாத ரீதியில் நசுக்கும் வரை இந்நாடு வாழமுடியாது. அரசாங்கம் தழைக்காது. பொருளாதாரம் வீழ்ச்சியுறும். இந்த அவல நிலைக்கு இந்நாட்டை உள்ளாக்காது நிதானமாக இருங்கள் என்று எச்சரிக்கை செய்யவும் விரும்புகிறோம்" என்று யாழ்ப்பாணம் நகரமண்டபத்தில் நேற்று நடைபெற்ற மேதின விழாவிற்குத் தலைமைவகித்துப் பேசு

(5-ம் பக்கம் பார்க்க)

## SCHOOL OF TECHNOLOGY, JAFFNA

### 1963-64 COURSES

*For Candidates with* **J. S. C.** *standard.*

| | |
|---|---|
| Electrical Installation work | Theory and Practical |
| Radio Servicing | |
| Motor mechanism | One Year Courses |

*For Candidates with* **G. C. E.** *Certificate with passes in* **Pure Maths, Physics** *and* **English**

| | |
|---|---|
| Electrical Engineering Practice (Preliminary) | |
| Electrical Engineering Practice (Intermediate) | City and Guilds |
| Electrical Installation Work (Course A.) | London |

*Part I.* **Institute of Engineers London.**

A.M.I.E.E.; A.M.I.MECH.E.; A.M.I.E.E.

*For Candidates with* **G. C. E.** *Certificate with* **Pure Maths., English** *and preferably with* **Drawing.**

Authorised Draughtsmen—Surveyor General's Exam. in May 1964

| | |
|---|---|
| Civil Engineering Drawing | School Certificate |
| Building Construction | |

*For Candidates with* **G. C. E.** *Certificate with passes in* **Englisn, Pure Maths., Sinhala/ Tamil,** *and three other subjects not more than* **Two** *sittings.*

Surveying — S. G's Licence Exam. August 1965.

**Applications close on May 15. Courses commence on June 3, 1963. Forms and other particulars can be had from :**

"CITADEL" Chundukuli, JAFFNA. Director.

25-4-63.



### கேள்விப்பத்திரம்

**புளியம்பொக்கணை ப. நோ. கூ. சங்கம்**

பரந்தன் முல்லைத்தீவு ரோட்டில் 7-ம் கட்டை சந்தியில் மேற்படி சங்கத்துக்கு கீழ்க்காணும் பொருட்கள் தேவை. இதற்கு கேள்விப்பத்திரங்கள் 13-5-63 காலை 10 மணிக்கு முன் கிடைக்கக் கூடியதாகப் பதிவுத் தபால் மூலம் விண்ணப்பிக்கவும்.

(அ) கண்டாவளை மணல்— பருக்கன்—29 கியூப்
(ஆ) காட்டுக் கல்—20 கியூப்
(இ) சல்லி 3/4"-21 1/4கியூப்
" 2"- 5 "
" 1"- 1 "

மேற்சொல்லப்பட்ட எல்லாப் பொருட்களுக்கும் ஒரு கேள்விப்பத்திரம் கொடுப்பவர் ரூபா 150 வைப்புப் பணம் கட்டவேண்டும். தனித்தனி கேள்விப்பத்திரம் கொடுப்பவர் ஒவ்வொரு கேள்விப் பத்திரத்துக்கும் ரூபா 50 வைப்புப்பணம் கட்டவேண்டும். வைப்புப்பணத்தை மனேச்சரிடம் கட்டிப்பற்றுச் சீட்டு பெற்றுக்கொள்ளவேண்டும். கேள்விப்பத்திரத்தில் பற்றுச்சீட்டு இலக்கம் குறிக்கப்படவேண்டும்.

கேள்விப்பத்திரம் ஏற்கப்பட்டது என்று சங்கக் காரியதரிசி கடிதமூலம் அறிவித்த ஒரு கிழமைக்குள் பின்வருமாறு ரொக்கப்பிணை கட்டி ஒரு உடன்படிக்கையில் கைச்சாத்திடவேண்டும்:-

எல்லாப் பொருட்களுக்கும் ரூபா 450/.

தனிப்பொருள் ஒவ்வொன்றுக்கும் பின்வருமாறு:-

(அ) ரூபா 100/-
(ஆ) ரூபா 150/-
(இ) ரூபா 200/-

(வைப்புப் பணம் பிணைக்கு எடுக்கப்படும்) ரொக்கப்பிணை கட்டி உடன்படிக்கையில் கைச்சாத்திடத் தவறினுல் வைப்புப் பணம் சங்கத்துக்குப் பறிமுதலாக்கப்படும்.

தலைவர்
புளியம்பொக்கணை
ப. நோ. கூ. சங்கம்

பரந்தன்
1-5-63 965



திருநெலவேலி
ஆடியபாதம் வீதியில்
அமைந்திருக்கும்
ஸ்ரீ கணேஷ் களியாட்டுவிழா அரங்கில் இன்று இரவு
விளான்
வேலுப்பிள்ளை
கோஷ்டியினரின்
அதிஅற்புத
**காவடி ஆட்டம்**
நடைபெறும்.
மற்றும் அதிபயங்கரமான
சாகஸ சர்க்கஸ் விளையாட்டு களையும்
காணத்தவருதீர்கள்!



### வரி விளம்பரம்

**புளியம்பொக்கணை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம்**

மேற்படி சங்கத்திற்கு ஓர் காவற்காரன் தேவை. வயது 35 - 50. பிணை ரொக்கம் ரூ. 500/- சம்பளம் எல்லாம் உட்பட மாதம் ரூபா 90- சமையல் அனுபவம் உள்ளவர் விரும்பத்தக்கது. விண்ணப்பங்கள் இரு நற்சாட்சிப் பத்திரங்களுடன் 10-5-63 வரை ஏற்றுக்கொள்ளப்படும்.

தலைவர்
புளியம்பொக்கணை
ப. நோ. கூ. சங்கம்

பரந்தன். 966

**தேவை**

வடமாகாணத்துக்கு மட்டும் யாழ் நீல, வெள்ளை சோப்களை விற்பனை செய்வதற்கு ஏஜன்ஸி தேவை. கீழ்க்கண்ட விலாசத்துக்கு விண்ணப்பிக்கவும். யாழ். இன்டஸ்ட்ரீஸ், ஓட்டுமடம் வீதி. வண்ணார் பண்ணை. 957


ஆசிரியருக்கு கடிதம்

## மாரியம்மன் ஆலய நிர்வாகம்

30-4-63-ல் 'ஈழநாட்டு' பத்திரிகையில் புளியங்கூடல் மாரியம்மன் ஆலய நிர்வாகம் பற்றிக் கொடுக்கப்பட்ட தகவல்கள் பல தவறாக உள்ளன. மேற்படி ஆலய முகாமைக்காரர் ஆகிய நான் உண்மையான தகவல்களை தெரியப்படுத்த விரும்புகிறேன்.

எனது உறவினர்கள் பலரும் புளயங்கூடல் வாசிகள் சிலரும் யாழ்ப்பாண மாவட்ட அதிபருக்கு புளியங்கூடல் மாரியம்மன் ஆலய நிர்வாகம்பற்றி செய்து கொண்டு மனுவொன்றை விசாரிக்குமுகமாக திரு. முதலியார் சின்னத்தம்பியை தலைமையாகக் கொண்ட மூவர் அடங்கிய ஓர் விசாரணைகுழு புளயங்கூடல் கிராம முன்னேற்றச் சங்க மண்டபத்தில் ஓர் விசாரணையை 27-4-63-ல் நிகழ்த்த முன்வந்தது.

விசாரணையின் போது மனுதார்கள் சார்பிலும எனது சார்பிலும் சாட்சியங்கள் கூற பலர் முன்வந்த போதிலும் மனுதார்களில் ஒருவரான வ. நாகநாதர் என்னும முதலாம் சாட்சி கூறிய சாட்சியத்தோடு விசாரணையை நிறுத்தி விசாரணைக் குழுவினர் இரு பகுதியாருக்கு மிடையில் சமரசம் ஏற்படுத்த முனைந்தனரேயன்றி முகாமைக் காரரைக் குறுக்கு விசாரணை செய்யவில்லை. முகாமைக்காரர் முதலாவது சாட்சி கூறியவற்றை எதிர்மறுக்கத்தக்க ஆதாரங்கள் வைத்திருந்தும் அவற்றைப் பேசுவதற்கு அவகாசம் அளிக்கப்படவில்லை.

மேலும் போஸ்ட்மாஸ்டர் சரவணமுத்து ஆசிரியர் நா. கந்தப்பு ஆகியோர் ஆலயம் பொதுமக்கள் பொதுவில் விடப்படவேண்டும் என்று வற்புறுத்தி எதுவித பேச்சு வார்த்தைகளும் விசாரணைக் குழுவினிடம் நடாத்தவில்லை.

விசாரணைக் குழுவினர் நல்லெண்ணத்தோடு மேற்கொண்ட ஒரு சமரச முயற்சியின் பலனுக ஒரு சமரச உடன்பாட்டை விரும்பினேனன்றி விசாரணையின் பலனுக ஓர் சமரச உடன்பாட்டுக்கு முன்வந்தேனல்லன். அதுவும் எனது பரம்பரை உரிமையையும் எனது நிர்வாக உரிமையும் என்றென்றும் பாதுகாக்கப்படும் ஒரு நிர்வாகத்திட்டத்தை விசாரணைக் குழு ஆக்கித்தந்தால் தீவுப்பகுதி வாழ் சைவப் பெரியார்களிலிருந்து தெரிந்தெடுக்கப்படும் 'டிரஸ்டி' ஒன்றின் துணையுடன் மேற்படி ஆலய நிர்வாகத்தை நடாத்த முன்வந்தேன்.

ச. துரையப்பா,
புளியங்கூடல். முகாமைக்காரர்.


**வீடு விற்பனைக்கு**

அரியாலையில் ஆனந்தன் வடலி வீதியில் புதிதாகக் கட்டப்பட்டுள்ள 53/2 ம் இலக்க வீடு (பாலைவளவு) விற்பனைக்குண்டு. 10 பரப்புள்ள இக்காணியில் பிரயோசனங்களுமுண்டு. கீழ்க்காணும் விலாசத்தில் தொடர்புகொள்ளவும்.

பொ. நடராசா, 46, பலாலி வீதி, கந்தர்மடம். 968

**தொய்வு: நீரிழிவு**

குணப்படுத்த உத்தரவாதம் மந்திரிமார், அரசியற் பிரமுகர்கள் எம்மிடம் சிகிச்சை பெற்ற விபரங்கள் அடங்கிய கற்றலோக் இனும். தொய்வுக்கு 10 நாள் மருந்து 12/50 நீரிழிவுக்கு 10 நாள் மருந்து 10/50.

வைத்தியர் பரிபூரணுனந்தர் கைலாயபிள்ளையார் கோவிலடி, யாழ்ப்பாணம்.

**வியாபாரம் பெருக விளம்பரம் செய்க**


# "குளத்தில் சடலம் மிதந்ததைக் கண்டேன்"

## ஆலயவலைக் கொலைவழக்கில் சாட்சியம்

மாவிட்டபுரம், புதன்

தலைமன்னாரைச் சேர்ந்த லோறன்ஸ் ரப்பியல் என்பவரைக் கடந்த பெப்ரவரி மாதம் 6-ந் திகதிக்கும் 19-ந் திகதிக்குமிடையே கொலை செய்ததாக பருத்தித்துறை வெற்றிலைக்கேணியைச் சேர்ந்த நாகப்பர் வல்லிபுரம் அல்பிரட், மருதங்கேணி ஆலயவலையைச் சேர்ந்த சின்னையா ஆறுமுகம் ஆகிய இருவர்மீதும் பருத்தித்துறை பொலிசாரால் குற்றஞ்சாட்டித் தொடரப்பட்ட வழக்கு பருத்தித்துறை மாஜிஸ்டிரேட் திரு. ஏ. வைத்திலிங்கம் முன்னிலையில் விசாரணைக்கெடுத்துக்கொள்ளப்பட்டது.

வேலுப்பிள்ளை சின்னப்பு சாட்சியமளிக்கையில் கூறியதாவது-

நான் காலஞ்சென்றவரின் பிரேதத்தைத் கண்டதினம், களிமண்ரோட்டில் சென்று கொண்டிருந்தேன். அப்போது ஆலயவலை குளத்தில் அடையாளம்தெரியாத சடலம் மிதக்கக் கண்டேன். முகம் கவிழ்ந்திருந்தது. அப்பிரேதம் தண்ணீரில் எப்படி வந்ததென்பது எனக்குத் தெரியாது நான் சடலம் மிதப்பதுபற்றி கிராமாதிகாரியிடம் சென்று தெரிவித்தேன். அவர் என்னுடன்வந்து பிரேதத்தைப் பார்த்தார். நான் சிறிதுநேரம் நின்றபின் வீடுதிரும்பிவிட்டேன். மறுநாட்காலை 9 மணி முதல் 1 மணிவரை பிரேதத்திற்கருகில் இருந்தேன். பிரேதம் புதைக்கப்பட்டபின் மாலை 5 மணியளவில் பொன்னையாவும் மற்றும்சிலரும் வந்து 'அடித்துப்போட்டு தண்ணிரில் போட்டால் நீங்கள் ஒன்றும் பேசாமல் ஒத்துக்கொண்டிருப்பீர்களோ?' என்றும் 'ஊருக்குப் பெரியமனிதரான நீங்கள் பேசாமலிருப்பது நன்றல்ல' என்றும் கூறினர். நான் பொன்னையாவிடம் "என்ன!" என்று கேட்டேன். இது ரப்பியலின் சடலமாகத்தான் இருக்கவேண்டுமென அவர் என்னிடம் தெரிவித்து மேலும் தானும் மற்றொருவரும் பரந்தனுக்குப் போய்விட்டு 'பஸ்'ஸில் வந்து இயக்கச்சியில் இறங்கிச் செல்லும்போது பண்ணையிலுள்ள ரத்தினத்தின் கள்ளுக்கொட்டிலுக்குச் சென்றதாகவும் அங்கு எதிரிகளும் காலஞ்சென்றவரும் 'கள்' அருந்திக்கொண்டிருந்தனரென்றும் கூறினர்.

கணபதிப்பிள்ளை பொன்னையா, ஏரம்பு ஆறுமுகம், அந்தோனி சூசை, முருகுப்பிள்ளை சுப்பையா, வல்லிபுரம் நல்லதம்பி ஆகியோர் சாட்சியமளித்தபின் மாஜிஸ்டிரேட் மேல்விசாரணையை இம்மாதம் 13-ம் திகதிக்கு ஒத்திவைத்தார்.

பருத்தித்துறை பொலிஸ் நிலைய சார்ஜன்ட் நடராசா வழக்கை நடத்தினர். எதிரிகள் சார்பில் திரு. என். நடராசாவின் அனுசரணையுடன் திரு. டி. கணேசலிங்கம் ஆஜரானர்.

## ரெனிடி' மெல்லின் எச்சரிக்கை

களுத்துறை, புதன்

நாட்டில் சர்வாதிகாரத்தை ஏற்படுத்த பலர் எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறார்கள் என திரு. ரெனிடி'மெல் பரிசளிப்பு விழா ஒன்றில் பேசுகையில் தெரிவித்தார். காடைத்தனமானதும், நாட்டாண்மைத்தனமானதுமான சர்வாதிகாரத்தை ஏற்படுத்த பல தனிப்பட்டவர்கள் காத்திருப்பதாக தான் பலமுறை எச்சரிக்கை செய்துள்ளதாகவும். சதிமுயற்சி செய்யப்படுவதற்குமுன்னர் இலங்கை வானொலியை படைகளிடம் கொடுக்குமாறு அரசாங்கத்தைத் தூண்டினர்கள் என்றும் தெரிவித்தார்.

## கார்ப்பரேஷனுடன் இணைப்பதற்கு ஆட்சேபம்

கொழும்பு, புதன்

அரசாங்க உப்பு இலாகாவை, உப்புக்கார்ப்பரேஷனுடன் இணைப்பதற்கு உப்பு இலாகா உத்தியோகஸ்தர் சங்கம் ஆட்சேபம் தெரிவித்துள்ளது.

உப்பு இலாகா உத்தியோகஸ்தர் சங்கம் அதன் தலைவர் திரு. வி.குமாரசாமிதலைமையில் கூடியபோது உப்பு இலாகாவை உப்புக் கார்ப்பரேஷனுடன் இணைப்பதை ஆட்சேபிப்பதென முடிவுசெய்யப்பட்டது. உப்புக்கார்ப்பரேஷனைக் கட்டுப்படுத்தி, உப்பு இலாகா மூலம் உப்புக்கைத்தொழில்மோசமடையாமல்செய்வதற்கு தேசிய மய மந்திரி நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

## மரண தண்டனை 5 தடவை ஒத்திவைப்பு

கொழும்பு, புதன்

சத்திரசிங்க டொன்சைமன், பெப்ரவரி 16-ந் திகதி தூக்கிலிடப்படவேண்டுமென தீர்ப்பளிக்கப்பட்டது. ஆனுல் இன்னும் அவர் தூக்கிலிடப்படவில்லை. ஐந்து தடவைகள் அவருக்களிக்கப்பட்ட தீர்ப்பிலிருந்து அவர் தப்பித்து வந்துள்ளார்.

கவர்னர்ஜெனரலின் உத்தரவுப்பிரகாரம் தான் தூக்கிலிடப்படவேண்டிய திகதிகள் ஒத்திவைக்கப்பட்டதாக சிறை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இவர் இம்மாதம் 14-ந் திகதி தூக்கிலிடப்பட வேண்டுமென 6-வது தடவையாக தீர்ப்பளிக்கப்பட்டது.

## மகாநாட்டை ஒத்திவைக்கக் கோரிக்கை

அல்ஜியர்ஸ், ஏப். 30

மொரோக்கிஸ் நகரில் மே 8-ந் திகதி நடைபெறவிருக்கும் கசபிளங்கா குழுவின் மகாநாட்டை ஒத்திப்போடும்படி அல்ஜீரியா கேட்டுள்ளது. அல்ஜீரிய பிரதமர் பென்பெல்லாவிற்கு மே மாதத்தில் அதிக வேலைகள் இருப்பதால் மகாநாட்டை ஒத்திப்போடும்படி கேட்டுள்ளதாக அல்ஜீரிய வெளிநாட்டமைச்சு தெரிவித்துள்ளது.

## பிரிட்டன் விரும்பவில்லை

நியுயோர்க், ஏப். 30

வானமண்டலத்திலிருந்து பூமியின் மீது அணு ஆயுத பரீட்சைகள் நடத்துவதை தான் விரும்பவில்லை என்று பிரிட்டன் ஐ. நா. வில் தெரிவித்துள்ளது. வானவெளிப் பிரகடனம் பற்றி ரஷ்யாவும் அமெரிக்காவும் சமர்ப்பித்த நகல் மசோதாக்கள் பற்றிப் பரிசீலனைசெய்ய ஐ நா. குழு கூடியபோது பிரிட்டிஷ் பிரதிநிதி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

# லாவோசில் அமைதிக்கு வழிகாண ஒரு கமிஷன்

வியன்டைன், மே 1

லாவோஸில் நிரந்தர சண்டை நிறுத்தம் ஏற்படவும் கலப்பு அரசாங்கம் தொடர்ந்து ஆட்சியிலிருப்பதற்கும் அமைதி நிலவவும் வழிவகைகளைக் காணும்பொருட்டு இணைப்புக் கமிஷன் ஒன்று லாவோஸில் அமைக்கப்படவிருக்கிறது.

லாவோஸ் பிரதமர் இளவரசர் சுவன்னபூமா மத்திய லாவோசுக்குச் சென்று திரும்பியபின் இத்தகவலை வெளியிட்டார்.

பதட் லாவோத் தலைவர் சுவன்ன வாங்குடன் தாம் பேச்சுவார்த்தை நடத்தியதாகவும் இளவரசர் சுவன்னபூமா தெரிவித்தார்.

## தாய்லாந்துக்கு புனித போதி

### இந்திய அன்பளிப்பு

பாங்காக், ஏப்ரல் 28

தாய்லாந்திலுள்ள ரியோ-எத் மாவட்டத்து மக்களுக்குப் புனித போதியின் (அரசமரம்) கன்று ஒன்றை இங்குள்ள இந்தியத் தூதர் சர்தார் நிரஞ்சன் சிங் ஜில் அளித்தார். நகரில் புதிதாகக் கட்டப்பட்டுள்ள பௌத்த கோவிலில் இக்கன்று நடப்படும்.

ரியோ-எத் மக்களின் சார்பாக, அந்த மாவட்டத்தைச் சேர்ந்த தாய்லாந்து நாட்டு விமானப்படைத் தலைமைத் தளபதி பூஞ்சு சந்திராபேட்சா பெற்றுக்கொண்டார்.

இந்திய தாய்லாந்து கலாச்சார சமய உறவுக்கு, புனித போதியின் இக் கன்று மேலுமொரு இணைப்புத் தொடராக இருக்கட்டுமென்று புதுடில்லியிலிருந்து இந்தியப் பிரதமர், மேற்படி பரிசளிப்பு விழாவின்போது அளித்த செய்தியில் கூறியுள்ளார்.

"திரிபதகா" "கீதை" ஆகியவற்றிலிருந்து சுலோகங்கள் முழங்க இந்த விழா நடைபெற்றது. ஏராளமான புத்த பிக்குகளுக்கு அன்னதானமும், துணிமணிகளும் வழங்கபபட்டன.

## 'நட்புக் கொண்டிருந்த சீனு தாக்கிவிட்டது'

—நேரு

புதுடில்லி, ஏப். 30

ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக நட்புக் கொண்டிருந்த நாடான சீனு நம்மைத் தாக்கிவிட்டது என பாரதப் பிரதமர் நேரு மேற்கு வங்காளத்தில் நடைபெற்ற ஒரு கூட்டத்தில் பேசுகையில் கூறினுர்.

பிரதமர் நேரு பேசுகையில் மேலும் கூறியதாவது:-

நாட்டின் பாதுகாப்பை வலுப்படுத்துவதில் நாம் ஒவ்வொருவரும் தீவிர கவனம் செலுத்தவேண்டும். சீனு மீண்டும் எப்பொழுது அபாயம் விளைவிக்குமென நாம் திட்டமிட்டுக் கூறமுடியாது.

நாம் எந்த நிலைமையையும் சமாளிக்கநமது உழைப்பு மூலம் நம்மைப் பலப்படுத்திக் கொள்ளவேண்டும்.

## விரைவில் ஏடனுக்கு சுதந்திரம்?

நியுயோர்க், ஏப் 30.

கூடியவிரைவில் ஏடனுக்கு சுதந்திரம் அளிக்க பிரிடடன் தீர்மானித்திருப்பதை இந்தியா வரவேற்றுள்ளது ஐ. நா. குடியேற்ற ஆதிக்க சபைக் கூட்டத்தில் இந்தியப் பிரதிநிதி இவ்விதம் தெரிவித்தார்.

## 'ஓஸி' பிரயாணிகள் ஒரு லட்சம்!

ராஜ்காட், ஏப்ரல் 30

மேற்குப் பிராந்திய ரயில்வேயில் ராஜ்காட் டிவிஷனில் மட்டும் 1962 ஏப்ரல் முதல் 1963 மார்ச் வரையுள்ள ஓராண்டு காலத்தில் டிக்கெட்டில்லா பிரயாணிகள் ஒரு லட்சம் பேர் பிடிபட்டனர். இவர்களிடமிருந்து அபராதத்தொகையாக ரூ. 50 ஆயிரம் உட்பட மொத்தம் ரூ. 4½ லட்சம் வசூலிக்கப்பட்டது. டிக்கெட்டின்றி பிரயாணம் செய்த ஒரு லட்சம் பேரில் பிச்சைக்காரர்கள். ஆண்டிகள் தொகை மட்டும் 36 ஆயிரமாகும். இவர்களில் பலர் சிறைக்கு அனுப்பப்பட்டனர்.

## மிருணளினி சாராபாய்

### அமெரிக்கா செல்வார்

ராஜ்காட், ஏப். 30

பரத நாட்டியத்தில் தேர்ச்சி மிக்கவரான மிருணளினி சாராபாய் இவ்வாண்டு செப்டம்பர் மாதம் 16-ந் திகதி அமெரிக்காவுக்குப் பயணமாவார்.

அமெரிக்காவில் நாடகக் கலைவளர்ச்சிக்கான கழகத்தின் அழைப்பின் பேரில் மிருணளினி சாராபாய் அமெரிக்கா செல்கிருர். அவர் அமெரிக்காவில் 2 மாத காலம் தங்கியிருந்து 15 அல்லது 20 பேருக்கு நாட்டியக் கலையில் பயிற்சியளிப்பார்.

## பூடானில் சீன ஒற்றர் கும்பல்

காங்டோக், ஏப்ரல் 30

பூடானில் சீன ஒற்றர் கும்பல் ஒன்று இயங்கி வருவதாகச் சந்தேகிக்கப்படுகிறது. இந்த ஒற்றர் கும்பல் பூடானிலிருந்து ரேடியோ ஒலிபரப்புக் கருவி ஒன்றின் மூலமாக சீனுவுக்கு ரகசியமாகச் செய்திகளை அனுப்பிவருவதாக இங்கு நம்பகமான தகவல்கள் கிடைத்துள்ளன.

ஒற்றர் கும்பலின் ரகசிய ரேடியோ ஒலிபரப்புச் செய்திகளை பூடான் அதிகாரிகள் தங்களிடமுள்ள ரேடியோ கருவிகள்மூலமாகக் கிரகித்துக்கேட்டபோதிலும்கூட ஒற்றர் கும்பலின் ரகசிய ரேடியோ ஒலிபரப்புக் கருவி எந்த இடத்தில் இயங்குகிறது என்பதைக் கண்டுபிடிக்க முடியவில்லை. சீன ஒற்றர்கள் எங்கு வேண்டுமானுலும் எடுத்துச்செல்லக்கூடிய வகையிலான ஒலிபரப்புக் கருவியைப் பயன்படுத்துகிருர்களோ என்றும் சந்தேகிக்கப்படுகிறது.

ரேடியோ ஒலிபரப்புக் கருவி இயங்க மின்சாரம் அவசியம். ஆனுலும் பூடானில் தலைநகரிலிருந்து தூரத்தில் உள்ள பகுதிகளில் மின்சார வசதி கிடையாது. அப்படி மின்சாரத்தை உற்பத்திசெய்ய ஜெனரேட்டர் கருவியைப் பயன்படுத்துவதானுலும் அது மற்றவர்களின் கவனத்தைக் கவர்ந்துவிடும். எனவே சீன ஒற்றர்கள் பாட்டரியால் இயங்கும் சிறிய ஒலிபரப்புக் கருவியைப் பயன்படுத்திவரக்கூடும் என்றும் இது சீனுவிலிருந்து கள்ளத்தனமாகக் கொண்டுவரப்பட்டிருக்கலாம் என்றும் எண்ணிக்கப்படுகிறது.

## ரூ. 300 கோடி வட்டியும் முதலுமா?

கல்கத்தா, ஏப்ரல் 30

வெளிநாடுகளிடமிருந்து இந்திய அரசாங்கம்பெற்ற கடனுக்காக 1963-54-ம் ஆண்டிலிருந்து 1965-66-ம் ஆண்டுவரை உள்ள மூன்ருண்டு காலத்தில் இந்தியா அசலும் வட்டியுமாக ரூ. 304 கோடியே 97 லட்சம் கொடுக்கவேண்டியுள்ளது. இந்தப் பணமானது இரண்டாவது திட்டகால முடிவு வரை இந்தியா வாங்கிய கடன்களுக்காகக் கொடுக்கப்படவேண்டியதாகும். மேற்கூறப்பட்ட தொகையில் கடனைத் தீர்க்க கொடுக்கப்படவேண்டிய அசல் ரூ. 185 கோடியே 79 லட்சமாகும். வட்டித் தொகை ரூ. 169 கோடியே 18 லட்சமாகும்.

மேற்கூறப்பட்ட தொகை இந்திய அரசாங்கம் வாங்கிய கடன்களைப்பற்றியதாகும். இண்டர் நெஷனல் மானிடரி நிதியிலிருந்து பெறப்பட்ட பணம் அரசாங்கத்துக்குச் சொந்தமான நிறுவனங்கள், தனியார் துறையினர் ஆகியோர் வாங்கிய கடன் வகையில் செலுத்தப்படவேண்டிய அசலும், வட்டியும் இதில் சேர்க்கப்படவில்லை.

## கிரேக்க மகாராணியை நடிகை காப்பாற்றினுர்

லண்டன், மே 1

சென்றவாரம் பிரிட்டிஷ் மகாராணி எலிசபெத்தின்சகோதரி முறையான அலெக்சான்ட்ராவின் திருமணத்துக்கு இங்கு வந்திருந்த கிரேக்க மகாராணி பிரெட்ரிக்காவுக்கு எதிர்ப்புத் தெரிவிக்குமுகமாக ஆர்ப்பாட்டக்காரர் அவரைப் பின் தொடர்ந்தபோது, தமது மகளுடன் ஓடிச்சென்ற மகாராணிக்கும் அவரது மகளுக்கும் அமெரிக்க நடிகை மார்ட் ஸ்டீவன்ஸ் தனது மாடியில் தஞ்சம் அளித்தார்.

கிரீஸிலுள்ள அரசியல் கைதிகளை விடுதலை செய்யுமாறே இந்த ஆர்ப்பாட்டக்காரர்கள் கோரினுர்கள்.

ஆர்ப்பாட்டக்காரர்களுள் ஒருவர் மகாராணியைப் பிடித்துத் தாக்கியதாக 28 வயதுடைய மார்ட்டி ஸ்டீவன்ஸ் தெரிவித்துள்ளார்.

## கணக்குத் தெரியாமல் அதிக சம்பளம்!

நியூயார்க், ஏப். 30

அமெரிக்க ராணுவப்படை வீரர்களுக்கும், அதிகாரிகளுக்கும் 1957-ம் ஆண்டிலிருந்து 1961-ம் ஆண்டுவரை உள்ள காலத்தில் கணக்குத் தெரியாமல் ரூ. 47 கோடி அதிகப்படியான சம்பளமாகக் கொடுக்கப்பட்டது. இதில் 38 கோடி ரூபாய் அவர்களால் திரும்பச் செலுத்தப்பட்டுவிட்டதாக அமெரிக்க பொதுக் கணக்குத் துறைக் காரியாலயம் தெரிவித்துள்ளது.

## பாகிஸ்தான் படைகளுக்கு பாராட்டு

நியூயோர்க், ஏப். 30

நியுகினியாவில் ஐ நா. தற்காலிக கண்காணிப்பு செய்கையில் ஐ. நா. படைகளில் கலந்துகொண்டு திறம்பட பணியாற்றிய பாகிஸ்தான் படைகளுக்கு ஐ. நா. உதவிக் காரியதரிசி திரு. யு. தாண்ட் நன்றி தெரிவித்துள்ளார்.

டச்சு ஆட்சியிலிருந்த நியுகினியாவில் ஐ. நா. 7 மாதங்கள் கண்காணிப்பு செய்து பின்னர் இந்தோனேஷியாவிடம் ஒப்படைத்தது.

# உலக முழுமைக்கும் பொதுவானவர் இக்பால்

## இக்பால் தினக்கூட்டத்தில் அஞ்சலி

யாழ்ப்பாணம், வியாழன்

"மகாகவி இக்பால் முஸ்லீமாய் இருந்தபோதிலும் அவர் உலகம் முழுவதற்கும் பொதுவானவர். அவருடைய கவிதைகள் முஸ்லீம்களுக்கு மட்டுமன்றி உலகமக்கள் அனைவர்க்கும் வாழ்க்கையில் நம்பிக்கை ஊட்டத்தக்கது" என்று திரு. வி. பொன்னம்பலம் யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற மகாகவி இக்பால் தினக் கூட்டத்தில் பேசுகையில் கூறினுர். ஜனுப் ஏ. எம். எஸ். முகிதீன் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் திரு. வி. பொன்னம்பலம் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:-

முஸ்லீமாக அவர் இருந்தபோதிலும் சமய வேற்றுமை பாராட்டாது மனிதகுலம் முழுமையையும் இருதய பூர்வமாக நேசித்தார். இஸ்லாமிய சமூகம் உலகப் பண்பாட்டிற்கும் உலக நாகரீக வளர்ச்சிக்கும் ஆற்றிய பங்கு கணிசமானது. இக்பால் போன்ற கவிகளையும் அறிஞர்களையும் முஸ்லிம் சமூகம் அளித்துள்ளது என்பதனை மறுக்க முடியாது

திரு. இளங்கீரன் பேசுகையில் கூறியதாவது:-

மகாகவி அல்லாமா இக்பால் 19 வது நூற்ருண்டிற்கும 20-ம் நூற்ருண்டிற்கும் உரியவராக திகழ்ந்தரோ அவ்வாறே கிழக்குலக தத்துவார்த்தங்களுக்கும் மேற்குலக தத்துவார்த்தங்களுக்கும் ஓர் இணைப்புப் பாலமாகத் திகழ்ந்தார். பல மொழிகளிலும் தேர்ச்சிபெற்ற கவிஞர் தமது கவிதைகள் மூலம் உறங்கிக்கிடந்த மக்களைத் தட்டி எழுப்பி அவர்கள் [illegible]ளத்தில் சுதந்திர வேட்கையை உண்டாக்கினுர். தன்னம்பிக்கையிழந்து கிடந்த மக்களிடத்தில் தன்னம்பிக்கை யூட்டி வாழ்வை நேசிக்கக் கற்றுககொடுத்தார். தத்துவஞானியாகவும், வழக்கறிஞராகவும், பேராசிரியராகவும், வாழ்ந்த அவர் இலக்கியத்தின்மீதும் கவிதைகளின் மீதும் தனது தனித்துவத்தை நிலைநாட்டி உலக மகாகவியாக உயர்ந்தார்.

ஜனுப் ஓ. எம். றவீத் பேசுகையில் கூறியதாவது:- இஸலாத்தில் பெண்களுக்கு எல்லாத் துறைகளிலும் ஆண்களோடு சரிநிகர் சமானமான உரிமையும் பங்கும் உண்டு கல்வியும் அறிவும் பெண்களுக்குப் பூரணமாக அளிக்கப்படவேண்டுமென இஸ்லாம் வலியுறுத்துகிறது. இதை மகாகவி இக்பாலும் தமது கவிதைகளில் அழுத்தம் திருத்தமாக கூறியுள்ளார்.

பல்கலைக்கழக மாணவன் செ. யோகநாதன், குணரத்தினம், உ. கமீது சுல்தான் ஆகியோரும் பேசினர்.

## 1969-ல் உஷ்ண அணுக்குண்டு

பாரிஸ், ஏப். 30

1969—ம் ஆண்டில் பிரான்ஸ் படையில் உஷ்ண அணுசக்தியுடன் கூடியஜலவாயுக்குண்டுகள் இருக்கும் என அறிவிக்கப்படுகிறதுஅப்போது 2000 மைல் செல்லக் கூடிய ஏவாயுதங்களும்இருக்குமெனச் சொல்லப்படுகிறது.

## பக்ஷி-நேரு சந்திப்பு

புதுடில்லி, மே 1

காஷ்மீர் பிரதமர் பக்ஷி குலாம் முகம்மது நேற்று இந்தியப் பிரதமர் நேருவைச் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தினுர்.

## ராதாகிருஷ்ணன்-மவுண்பேட்டன் சந்திப்பு

புதுடில்லி, மே 1

நேற்று புதுடில்லி வந்து சேர்ந்த மவுண்பேட்டன் பிரபு பிற்பகல் ராஷ்டிரபதி டாக்டர் ராதாகிருஷ்ணனைச் சந்தித்தார் இச்சந்திப்பின் போது இந்தியாவிலுள்ள பிரிட்டிஷ் ஹைகமிஷனரும் சமுகமளித்திருந்தார்

இதற்கு முன்பாக மவுண்பேட்டன் பிரபு ராஜ் காட்டுக்குச் சென்று காந்தி சமாதியில் மலர் வளையம் வைத்து அஞ்சலி செய்தார். காந்திஜியுடன் நெருங்கி பழகிய தமக்கு சமாதியில் இரண்டாவது தடவையாகவும் மலர் வளையம் வைத்து அஞ்சலி செய்யும் வாய்ப்புக் கிடைத்ததுபற்றித் தாம் பெருமைப்படுவதாக அவர் சொன்னுர்.

## ஜோர்டான் பிரதமரை கொல்ல நடந்த முயற்சி

அம்மான், மே. 1

ஜோர்டான் பிரதம மந்திரி ஹஸனைக் கொல்வதற்கு நேற்று முயற்சி நடைபெற்றதாக ஒரு செய்தி கூறுகிறது. அவரைநோக்கி ஏழுதடவைகள் சுடப்பட்டதாகவும் ஏழுதடவைகளிலும் அவர் தப்பி விட்டதாகவும் கூறப்படுகிறது. சுட்டவன் தப்பி ஓடிவிட்டான்.

## கண்காட்சியில் கருகிய சிலுவை

நியூயார்க், ஏப்ரல் 30

நியூயார்க நகரில் 1964-65-ம் ஆண்டில் உலகக் கண்காட்சி நடைபெற இருக்கிறது. இந்தக் கண்காட்சியில் இடம் பெறப்போகும் மதச் சின்னங்களில் ஒன்று கருகிய மரச் சிலுவையாகும்.

பிரிட்டனில் கவண்ட்ரி கிறிஸ்தவாலயத்தின் மீது 23 ஆண்டுகளுக்கு முன்பு ஜெர்மன் விமானங்கள் குண்டு வீசிய போது இந்த ஆலயம் நாசமடைந்தது. அப்போது அங்கிருந்த மரச் சிலுவை கருகிப் போயிற்று. அச்சிலுவை நியூயார்க் உலகக் கண்காட்சியிக் காட்சிப் பொருளாக வைக்கப்படும்.

## "கட்டாய மத மாற்றம் வேண்டாம்"

புதுடில்லி, ஏப்ரல் 30

பாகிஸ்தானில் சிறுபான்மையினரை கட்டாயமாக மத மாற்றம் செய்யாமலிருக்குமாறு பார்த்துச்சொள்ளும்படி பாகிஸ்தான் அரசாங்கத்துக்குக்குறிப்பு அனுப்பப்பட்டிருக்கிறதாம். இம்மாதம் 8 பெண்கள் கட்டாய மதமாற்றம் செய்யப்பட்டதையடுத்தே இக்குறிப்பு அனுப்பப்படதாகக் கூறப்பட்டது.

## இமயத்தில் பனிப்படலம் குறைகிறது

லக்னோ, ஏப். 30

இந்தியநிலஉட்கூறு ஆராய்ச்சிக் கழகம் நடத்திய சர்வேயிலிருந்து, இமயத்தில் பனிப்படலம் குறைந்து வருவதாகத் தெரிகிறது.

### மணி வாக்கு

ஒவ்வொருவரும் தத்தமது அந்தராத்மா அல்லது மனச்சாட்சி கூறுகிறபடி நடக்க வேண்டும். மனச்சாட்சி கூறுவதைக் கேட்கக்கூடிய காதுகள் இல்லாவிட்டால் அவர்கள் தங்களாலான மேலானதைச் செய்யட்டும். எப்படியும் அவர்கள் மற்றவர்களைப் பார்த்து வேஷம் போடக்கூடாது.

—மகாத்மா காந்தி

ஈழநாடு

EELANADU. National Tamil Daily Post Box 49, Jaffna
Telegrams EELA NADU Jaffna
Phone 389

யாழ்ப்பாணம் சுபகிருது ஆண்டு
சித்திரை மீ 19உ (2 5-63)

## மக்களின் ஊழியர்கள்

முதல் முதலாக நேற்று பதவி ஏற்ற சுமார் 3000 கிராம சேவகர்களைப் பொது மக்கள் சார்பாக வரவேற்கையில், இதுவரை தொண்டாற்றி வந்த விதானைமார்களுக்கு நன்றியுடன் பிரியாவிடை அளிக்க வேண்டும்.

விதானை அல்லது கிராமத் தலைவர் முறை 2124 வருடங்களுக்கு முன்பாக இங்கு ஏற்பட்டதாகக் கூறப்படுகின்றது. இந்த 21 நூற்றாண்டுகளிலே அரசியலில் எவ்வளவோ மாறுதல்கள் ஏற்பட்டிருப்பினும், இதுவரை விதானை முறை தொடர்ந்து இருந்து வந்துள்ளதிலிருந்து இந்த சேவையின் முக்கியம் புலனாகிறது. கிராம மக்களுக்கும் அரசாங்கத்துக்கும் ஓர் இணைப்புச்சங்கிலி போல் அவர்கள் இருந்து வந்துள்ளனர். அவர்களில் சில சுயநல புல்லுருவிகள் இருந்திருக்கலாம். என்றாலும் மிகவும் குறைந்த சம்பளம் பெற்று, சேவை வசதிகளின்றித் தொண்டாற்றிவந்த விதானைமார்களில் பலருக்கும் பொது மக்களின் நன்றி உரித்தாகும்.

பதினைந்து ஆண்டுகளுக்கு முன்பாக இலங்கை அரசியல் அமைப்பிலே ஏற்பட்ட பெரிய மாறுதலின் பயனாக, அடிப்படையிலுள்ள விதானைமார் சேவையில் மட்டுமின்றி, மேலே சிவில் சர்விஸ் அமைப்பிலும் நேற்று முதல் புதிய மாறுதல்கள் ஏற்பட்டுள்ளன 165 வருட காலமாக இருந்து வந்த 'சிவில் சர்விஸ்' என்ற பெயர் 'யு. ஏ. எஸ்.' (யுனைட்டெட் அட்மினிஸ்டிரேடிவ் சர்விஸ்—ஐக்கிய நிர்வாக சேவை) என்று மாற்றப்பட்டுள்ளது. இதுவரை சி. சி. எஸ். ஸில் பெண்களுக்கு இடமில்லாதிருந்தது. இனி இப்புதிய நிர்வாக சர்விஸில் பெண்களுக்கும் இடம் இருக்குமாம். இது வரவேற்கத்தக்கதாகும். ஆனால் கிராம சேவகர் சர்விஸில் பெண்களுக்கு இடமளிக்காதது ஒரு குறையே. இக்குறை சீக்கிரத்தில் நீக்கப்படவேண்டும். நிர்வாகத்திறமையிலும் ஆண்களுக்குப் பெண்கள் எவ்வகையிலும் குறைந்தவர்களல்லர். பெண்களும் இச்சேவைக்கு நியமிக்கப்படுவதால் பெண் சமூகம் புதிய உற்சாகமடைந்து அந்த சேவையின் மதிப்பும் உயரக் கூடும்.

ஐக்கிய நிர்வாக சேவையைப் பற்றி அரசாங்க குமஸ்தாக்கள் யூனியன் ஒரு முக்கிய புகார் தெரிவித்துள்ளது. ஏற்கெனவே இருந்த சிவில் சர்விஸுக்கு குமாஸ்தாக்களில் அனுபவமும் திறமையுமுள்ளவர்கள் பதவி உயர்வு பெறக் கூடியதாக இருந்தது. ஆனால் புதிய யு. ஏ. எஸ்ஸில் அதற்கு இடமில்லாமற் செய்துள்ளது பெரிய அநீதியேயாகும். இதனால் அரசாங்க சேவையில் புதிய "சாதி வேற்றுமை" ஏற்படுவதுடன், அவர்களிடையே அதிருப்தியையும் அதிகரிக்கச் செய்யும். மேலும் 'யு. ஏ. எஸ.' சர்விஸுக்கான நியமன அதிகாரம் பொது சேவைக் கமிஷனிடமே ஒப்புவிக்கப்பட்டுள்ளது. அக்கமிஷன் சுதந்திரமாக இயங்க முடியாமல், அரசியல் தலையீடுகள் அதிகமிருப்பதாயும் சொல்லப்படுகின்றது. இது உண்மையாயின் நிர்வாகம் சீர்குலைவதுடன், பொது மக்களின் நன்மையும் பாதிக்கப்படும்.

சேவையின பெயர்களையும் விதி முறைகளையும் மாற்றுவதால் மட்டும் பயனில்லை. கிராம சேவகர்கள் உள்ளிட்டு, அரசாங்க சேவையில் ஈடுபட்ட எல்லாரும் தாங்கள் பொதுஜன அதிகாரிகள் அல்லவென்றும், பொதுஜன ஊழியர் என்றும் உணர்ச்சி கொண்டு, தங்கள் மனப்பான்மையில் அடிப்படை மாறுதலை ஏற்படுத்திக்கொள்ள வேண்டும். மனப்பான்மையில் இவ்வித மாறுதல் ஏற்பட்டால்தான் அவ்வூழியர் பொது மக்களின் அபிமானத்தைப் பெற முடிவதுடன், தங்கள் கடமைகளையும் வெற்றிகரமாகச் செய்யமுடியும்.

# தாளம், சந்தம் சிறக்கப் பாடிய அருணகிரிநாதர்

— கலாநிதி சு. வித்தியானந்தன் —
(பல்கலைக் கழகம், பேராதனை.)

பல்வேறு வகைச் சந்தக் குறிப்புக்களும், வண்ணமுறைகளும் இனிதமைந்திருப்பது திருப்புகழ். சந்தநலஞ் சிறந்த வாக்கின் பெருமை பற்றி, வரகவி மார்க்கசகாய தேவர் என்னும் புலவர்,

"சந்தநிலை வழுவாமல் அந்த
மொரு சற்றுந்
தளர்ந்து வெளிறாமல் அமு
தந் தழுவு
பதினாயிரந் திருப்புகழெனும்
தமிழ்மாலை
சாற்றி யுருகிச் சித்திபெறும்
அருணகிரிநாதர்"

எனக் கூறுவர். செம்மொழி வல்ல செந்தமிழ் அருணகிரியார் அன்பு மயமாய் நின்று மனம் குழைந்து உருகி நெஞ்சில் அருள் வெள்ளம் பெருக்கெடுப்ப, அவ்வின்ப வெள்ளத்தில் ஆழ்ந்து திளைத்துத் திருவாய்மலர்ந்தருளிய திருப்புகழ், மனங் கரைத்து மலங் கெடுக்கும் வாசகத்தை உடையது. இத்தகைய சிறப்பமைந்த திருப்புகழைச் சந்தமெனும் செவ்விய அலையெறியும் தண்ணிய தமிழ்க்கடல் எனச் சாற்றுவர்.

"............ அருணகிரிநாதன்
உதிருங் கனியை நறும்பாகில்
உடைத்துக் கலந்து தேனை
வடித்
தூற்றி யமுதினுடன் கூட்டி
யொக்கக் குழைத்த ருசி
பிறந்து
மதுரங்கனிந்த திருப்புகழ்ப்
பா மாலை புனைந்தான்..."

எனச் செங்கோட்டை "கவிராஜ பண்டாரத்தையா" எனும் பெரியார் திருப்புகழாசிரியரைப் பாராட்டிக் கூறுவர்.

தாள நுட்பங்கள் செறிந்த நூல் திருப்புகழ். சொற்செறிவிலும், ஓசை நயத்திலும், தாளப் பிரத்தாரங்களிலும் பொருள் நுட்பத்திலும் மிகவும் சிறந்த நூல் திருப்புகழ் என்பதனை யாவரும் அறிவர். ஆனால் அதன்கண் அமைந்திருக்கும் நுட்பமாகிய தாளலயத்தை இசைக்கலையில் தேர்ச்சி பெற்ற லய சம்பந்தமான ஆராய்ச்சியாளரே அறிவர். தெய்வத்தன்மை வாய்ந்த இசையினை வளர்த்தற்குத் தேவார திருவாசகங்கள் எவ்வாறு உதவுகின்றனவோ, அவ்வாறே லய சம்பந்தமான இசை வளர்ச்சிக்குத் திருப்புகழ் சந்தப்பாடல்கள் துணை செய்கின்றன. திருப்புகழிலுள்ள சொல் நடைகளும், தாளச் சொற்கட்டுக்களும், தாள வகைகளைப் பெருக்கிச் செல்லுதலாகிய பிரஸ்தாரக் கிரமங்களும் இந்நூல் லயசம்பந்தமான ஓர் இசை இலக்கியம் என்பதை நனகு விளக்குகின்றன.

அருணகிரிநாதர் வில்லிபுத்தூராருடன் வாது செய்யுங் காலத்திலே பாடிய கந்தரந்தாதிக்கு உரை கூறி வந்த வில்லிபுத்தூரார் அந்நூலில் 'திதத்தத்த' எனத் தொடங்கும் செய்யுளுக்கு உரை சொல்லமாட்டாது தோல்வியுற்றமைக்குக் காரணம் அப்பாடலிலுள்ள 'திதத்தத்த' என்னும் லய சம்பந்தமான சொற்கட்டுக்களை உணர்ந்து கொள்ள முடியாமையே என்பர். இசை வளர்ச்சிக்கு இன்றியமையாத முப்பத்தைந்து தாளங்கள், நூற்றெட்டுத் தாளங்கள், பஞ்ச தாளங்கள், அன்னிய தாளங்கள், பிரத்தாரக் கிரமங்களினால் உண்டாகும் தாளங்கள் ஆகியன யாவும் திருப்புகழ்ப் பாடல்களிலே காணப்படுகின்றன என இசை ஆராய்ச்சியாளர் கூறுவர். மேலும், கதி பேதம், நடை பேதம், கண்டப்பிரத்தாரமென்னும் அங்கம் அழிவுபடாமல் பிரத்தாரம் செய்யும் முறை என்பனவும் திருப்புகழிலே அடங்கியுள்ளன எனக் கொள்வர். திருப்புகழிற்குரிய சுரதாளக் குறிப்புக்களை அண்மையிலைப் பல்கலைக் கழகத்தார் பத்தாண்டுகளுக்கு முன்பே வெளியிட்டுள்ளனர்.

இசையரங்குகளிலே திருப்புகழைப் பாடுவது இப்பொழுது வழக்கமாகிவிட்டது. தாள லயத்தினை உணர்தற்குத் திருப்புகழ் சிறந்த இலக்கியமாகும். தாளமே பாட்டாக அமையப் பாடப்பெற்ற சிறப்புடையது திருப்புகழ். நூற்றுக்கணக்காக, ஆயிரக்கணக்காக விரிந்து விளங்குவன தாள வகைகள்.

தென்றல் வடிவும் சிவனார்
திருவடிவும்
மன்றல் வடிவும் மதன்வடி
வும் - குன்றுத
வேயி னிசைவடிவும் வேத
வடி வுங்காண

வாயின் தாளங் காணலாம் இத்தகைய தாள பேதங்களைத் திருப்புகழ் ஒன்றிலேயே உணரலாம். தமிழ் இசைப் பாடல்களாகிய திருப்புகழ்ப் பாக்களைப் பாடுவோர் தொகை பெருகுக. முருகன் கருணையைப் போற்றும் அருணகிரிநாதருக்கு விழா எடுக்கும் மேன்மக்கள் நீடூழி வாழ்க. முருகன் அருள் உலகெங்கும் பரவுக. சாந்தி நிலை நிற்கவே.

"ஐயா! அருணகிரி யப்பா!
உனைப் போல
மெய்யாக ஓர்சொல் விளம்பி
னர் யார்?" எனவும்,

"கந்தரநுபூதி பெற்றுக் கந்த
ரநுபூதி சொன்ன
எந்தையருணகிரிநாதனெந்நாளோ"

எனவும் தாயுமான சுவாமிகளாற் புகழ்ந்து பாராட்டப் பெற்ற அருணகிரிநாதர், செவ்வேட் பெருமானுக்குச் செஞ்சொற்புனைமாலை சிறக்க அணிந்தவர். இசை நிரம்பிய தமிழ்ப் பாவினைதனில் குழைந்த அன்பில் நெக்கு நெக்குருகிக் குமரவேளைப் பாடிப் பரவி இசைவழி இறைவனின் அருள் பெற்றவர் அருணகிரிநாதர்.

"வாக்கிற்கு அருணகிரிநாதர்" என இவரின் திருவாக்குச் சிறப்பாகக் குறிப்பிடப்படுகின்றது. செவிக்கு இன்பந் தரக்கூடிய செஞ்சொற்கள் பொருள் சிறக்கச் சந்தம் பொலியக் கையாளப்படுவதனாலேயே அவரின் வாக்கிற்கு இவ்வளவு மதிப்புண்டு. செவ்வேளின் திருவருள் சிறக்கப்பெற்றுச் செந்தமிழ்ப் புலமையில் அற்புத சக்தி வாய்ந்து வண்ண நலஞ் சிறந்த பற்பல சந்தக் கவிகள் இயற்றுவதில் தமக்கு ஒப்பாரும் மிக்காருமின்றி வீறுபெற்று விளங்கும் இப்பெரியார் பதினைந்தாம் நூற்றாண்டுக்குரியவர். திருவகுப்பு, கந்தரந்தாதி, கந்தரலங்காரம், கந்தரநுபூதி, திருப்புகழ் முதலியன இவர் பாடியவை.

சந்தப்பாவில் முருகக்கடவுளின் சீர்பாதப் பெருமை, அடியார் பெருமை, வேலாயுதத்தின் பெருமை, உபதேசப் பெருமை, பிரசாதப் பெருமை, கடைக்கணோக்கப் பெருமை, திருக்கரங்களின் சிறப்பு ஆகியவற்றை வகுத்து எடுத்து ஓதும் நூலே திருவகுப்பு. முருகனின் பெருமையை இந்நூல் பலபடப் புகழ்கின்றது. முருகப்பிரானுக்குத் தொழும்பூண்ட அடியார் பாராயணமாகப் படித்துவரும் நூல்களில் ஒன்று கந்தரந்தாதி. அருணகிரிநாதருக்கும், வில்லிபுத்தூராருக்கும் நிகழ்ந்த புலமைப் போரில் இஃது இயற்றப்பட்டதாகக் கூறுவர். கந்தவேளின் திருவடி முதல் திருமுகம் வரையுமுள்ள உறுப்புக்களின் சிறப்பையும் அவர் வாகனமாகிய மயில், வேற்படை, சேவற்கொடி ஆகியவற்றின் பெருமையையும் இனிதுற விளக்கும் நூல் கந்தரலங்காரம். இந்நலம் பற்றி இந்நூலுக்கு கந்தரலங்காரம் எனனும் திருப்பெயர் வாய்ந்தது. கந்தபிரான் செய்த உபதேசச் சிறப்பையும், அப்பெருமானது திருவருட் பிரசாதத்தின் பெருமையையும் பேசும் நூல் கந்தரநுபூதி. 51 செய்யுட்களைக் கொண்ட இந்நூலுக்கு இணையாம் நூல் வேறு இல்லை என்பது சிலர் துணிபு

## 1000 தொழிற் சங்க யூனியன்கள்

கொழும்பு, புதன்
இலங்கையில் பதிவு செய்யப்பட்ட தொழிற் சங்கங்கள் சுமார் 1000 இருக்கின்றன. இவற்றில் 600 அரசாங்க சேவை தொழிற்சங்கங்கள் உள்ளன.

தொழில் அமைச்சினால் வெளியிடப்பட்டுள்ள 'மேதினம் 1963" என்ற புத்தகத்தில் மேற்கண்ட விபரம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## ஐயாறன் எழுதுவது

ஒரு இலங்கைப் பெண்மணி சென்னை சென்று படிக்கையில் ஓர் இந்திய வாலிபரை மணந்தார். அங்கு மாப்பிள்ளை அரசாங்க சேவையிலிருந்ததால், பெண் சுலபமாக இந்தியப் பிரஜையாக முடிந்தது. பேறுகாலத்துக்காக இலங்கையிலுள்ள தன் பெற்றோர்களிடம், அப்பெண்மணி வந்தார். உடல் நலம் சரியில்லாததால் மூன்று மாதங்களுக்கு மேல் தங்க வேண்டியதாயிற்று. அதனால் விசா வரியாக 400 ரூபாயை அப்பெண் கட்டவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டுள்ளதாம்!

ஒரு பெண் தன் பெற்றோர்களிடம் வந்து அவசிய காரணத்துக்காகத் தங்கி இருக்க நேரிட்டால், இதற்காக அவரிடம் 'கொண்டு வா வரி' என்று கேட்பது, சரியா? இலங்கையைப்போல் விஸா வரி உலகில் எந்த நாட்டிலும் கிடையாதாம். வருமானத்துக்காக வரி போடவேண்டியிருப்பின், இங்கு வேலையில் சேர்ந்து சம்பாதிப்பவர்களிடம் வரி வசூலிக்கட்டும். ஆனால் பெற்றோர்களிடம் ஒரு பெண் வந்து, அவசிய காரணத்துக்காகத் தங்கியிருக்கவேண்டியிருக்கையில், அவருக்கும் வரி போடுவது மனித நீதிக்கும் இலங்கையின் நற்பெயருக்கும் அடுக்காது. (நியாயமின்றி இவ்வரியை வசூலித்ததால்தான், வசூலான பெருந்தொகையை சில இரண்டுகால் பெருச்சாளிகள் விழுங்கிவிட்டனபோலும்).

சம்பள வருமானமில்லாத மத குருமார்களுக்கு விஸா வரியிலிருந்து விலக்கு அளித்துள்ளனர். அதுபோல் இவ்வித விஷயங்களிலும், வரி விலக்கு அளிப்பதே முறை. ஒரு பெண்மணியைப் பிரதம மந்திரியாகக் கொண்டுள்ள இலங்கை அரசாங்கம் இவ்விஷயமாக மனித நீதிக்கேற்ப அனுதாபத்துடன் காரியம் செய்யுமா?

* * *

திருக்கேதீச்சரத்திலே இப்போது அலங்காரத் திருவிழா மிக வைபவமாக நடந்துவருகிறதாம், யாழ்ப்பாணம், கொழும்பு, முதலிய பல இடங்களிலிருந்தும் பல கல்லூரி ஆசிரியர்களும் மாணவர்களும் விசேஷ பஸ்களில் சென்று ஒவ்வொரு நாள் உற்சவத்தையும் பக்தியுடன் நடத்தி வருவதாகக் கேள்விப்பட்டேன். ஈழத்திலுள்ள சைவ மக்களுக்கு இச்சோதனை காலததிலே ஆறுதலும் நம்பிக்கையும் அளிக்கும் ஒரு முக்கிய ஸ்தலமாக திருக்கேதீச்சரம் வளர்ந்துவருகின்றது. இதற்கும்கூட பல பல தடைகளாம்! சேர் கந்தையா வைத்தியநாதன், அங்கிருந்து, இத்தடைகளை எல்லாம் எதிர்த்து நின்று இத்திருப்பணியை வெற்றிகரமாக நடத்திவருவதாக அங்கிருந்து திரும்பிய ஓர் ஆசிரியர் கூறிப் பாராட்டினார்.

* * *

ஒரு சின்னக் காரியம் செய்தாலும் இக்காலத்தில் சிலர் தங்களைப் பெரிதாக விளம்பரம் செய்து கொள்வதைப் பார்க்கிறோம். ஆனால் கீரிமலை திருக்குறிப்புத் தொண்டர் சபையினர் ஒரு பெரிய காரியம் செய்தும், எவ்வித விளம்பரத்தையும் நாடவில்லை! அச்சபையினர் வண்ணையிலே ஒரு புகழ்பெற்ற சிற்பாசிரியர்மூலம் அழகான "பிரதோஷ மூர்த்தியை"ச் செய்து, ரிஷப வாகனத்தில் வைத்து, திருக்கேதீச்சரம்வரை சுமார் நூறு மைல் தூரம் பாதயாத்திரையாகவே சென்று, அங்கு அக்கோவிலாரிடம் ஒப்புவித்தார்களாம்! இதில் சுமார் நூறு பேருக்குமேல் கலந்துகொண்டனர், சங்கரப்பிள்ளை ஆசிரியரின் தலைமையில் இனிமையான தேவார பஜனைகள் வழி நெடுக நடைபெற்றதாம்

வழியிலே கோப்பாய், தனங்களப்பு, கேரதீவு, விடலத்

(5-ம் பக்கம் பார்க்க)

# “ஆதரிப்பவர் யாருமில்லை என்று கோகிலாம்பாள் சொன்னார்,,

## கோயில் ஐயர் கொலை வழக்கில் மாஜிஸ்டிரேட் சாட்சியம்

சாவகச்சேரி, புதன்

உருத்திரபுரம் கோயில்ஐயர் கொலைவழக்கு நேற்றுப் பிற்பகல் சாவகச்சேரி மாவட்ட நீதிபதி திரு. எம். எம். அப்துல்காதர் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது, மாஜிஸ்டிரேட் திரு. ஏ. வைத்திலிங்கத்தை இரண்டாவது எதிரி ஆர். பசுபதியின் வழக்கறிஞர் திரு. டி. கணேசலிங்கம் குறுக்கு விசாரணை செய்தார்.

1962-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 14-ந் திகதி உருத்திரபுரம் கோயில்ஐயர் காசிலிங்க சர்மாவை முத்தர் வேலுப்பிள்ளை, ஆர். பசுபதி, கோகிலாம்பாள் ஆகியோர் கொலை செய்ததாக இவ்வழக்கில் குற்றம்சாட்டப்பட்டுள்ளது.

முதலாவது எதிரி முத்தர் வேலுப்பிள்ளை சார்பில் திரு. ஏ. அமிர்தலிங்கம் திரு. ஆர். டி. சிவகுருவின் அனுசரணையுடனும், இரண்டாவது எதிரி ஆர். பசுபதி சார்பில் திரு. டி. கணேசலிங்கம், திரு. எஸ். செல்லத்தம்பியின் அனுசரணையுடனும் ஆஜரானார்கள். கோகிலாம்பாள் சார்பில் எவரும் ஆஜராகவில்லை. கிளிநொச்சி பொலிஸ் இன்ஸ்பெக்டர் திரு. பொன்னுத்துரை வழக்கை நடத்தினார்.

மாஜிஸ்டிரேட் திரு. ஏ. வைத்திலிங்கம் சாட்சியமளித்தபோது கூறியதாவது:

கோகிலாம்பாள், தான் காலஞ்சென்ற காசிலிங்கசர்மாவின் மனைவியென்றும், தான் வாக்குமூலம் அளிக்க விரும்புவதாகவும் என்னிடம் கூறினார். அதன்படியே கோகிலாம்பாளின் வாக்குமூலத்தைப் பதிவுசெய்தேன். வாக்குமூலத்தை நான் பதிவு செய்யமுன்பு, என்ன காரணத்திற்காக வாக்குமூலம் அளிக்க விரும்புகிறார் என்பதை அறிய சில கேள்விகள் கேட்டேன். கேள்விகளும் கோகிலாம்பாளின் பதிலும் பின்வருமாறு:

கேள்வி: எதற்காக வாக்குமூலம் அளிக்க விரும்புகிறீர்?

பதில்: எனக்கு உதவிசெய்ய யாருமில்லை. உண்மையைத் தெரிவிக்க விரும்புகிறேன்.

கேள்வி: உண்மையைத் தெரிவிப்பதன்மூலம் எதனை எதிர்பார்க்கிறீர்?

பதில்: நான் உண்மையைத்தான் கூற விரும்புகிறேன்.

கேள்வி: வாக்குமூலம் அளித்தால் உபகாரம் கிடைக்குமென்று யாராவது உமக்குக் கூறினார்களா?

சாட்சி: இல்லை.

கேள்வி: வாக்குமூலம் அளிக்கும்படி உம்மை யாரும் பயமுறுத்தினார்களா?

பதில்: இல்லை.

கேள்வி: வாக்குமூலம் அளித்தால் நன்மை செய்வதாக யாராவது வாக்குறுதியளித்தார்களா?

பதில்: இல்லை.

கேள்வி: உமது சொந்த பூரண விருப்பப்படியே வாக்குமூலம் அளிக்க விரும்புகிறீரா?

பதில்: ஆம்

இந்தப் பதில்களிலிருந்து சொந்த விருப்பத்தின்மூலமே கோகிலாம்பாள் வாக்குமூலம் அளிக்க முன்வந்துள்ளார் என்பதை ஏற்றுக் கொள்கிறேன். எனக்கு அளித்த வாக்குமூலத்தில் கோகிலாம்பாள் தெரிவித்ததாவது:

நான் 17-1-63-ல் மாலை 5 மணிக்கு சேரான்பற்று என்னும் இடத்தில் கைதுசெய்யப்பட்டேன். பொலிஸார் ஒருவரும் வேறு இருவரும் என்னை கைது செய்தார்கள். உடனடியாக என்னை கிளிநொச்சி பொலிஸ் நிலையத்திற்குக் கூட்டிச் சென்றார்கள். அன்று இரவு பொலிஸ்நிலையத்திலிருந்தேன். அடுத்தநாள் உருத்திரபுரத்திலுள்ள எனது வீட்டிற்கு அழைத்துச் சென்றார்கள். திரும்பவும் என்னைப் பொலிஸ்நிலையத்திற்குக் கூட்டி வந்தார்கள். நீதிபதிமுன் மத்தியானம் ஒரு மணிக்குஅழைத்துச் செல்லப்பட்டேன். மறுநாள் என்னைப் பிஸ்காலிடம் பாரம் கொடுத்தார்கள் வெள்ளிக்கிழமை இரவு கிளிநொச்சி பொலிஸ் நிலையத்திலிருந்தேன்.

கோகிலாம்பாளின் வாக்குமூலத்திலுள்ள மற்றும் விஷயங்கள் கோர்ட்டில் பகிரங்கமாகத் தெரிவிக்கப்படவில்லை.

மாஜிஸ்டிரேட் திரு. ஏ. வைத்திலிங்கத்தை இரண்டாவது எதிரியின் வழக்கறிஞர் திரு. டி. கணேசலிங்கம் குறுக்கு விசாரணை செய்தார்.

வழ: சம்பவம் நடந்த இடத்திற்கு எத்தனை மணிக்குச் சென்றீர்கள்?

நீதிபதி: நண்பகல் 12-25.

வழ: அப்பொழுது அங்கே இன்ஸ்பெக்டர் இருந்தாரா?

நீதிபதி: ஆம்.

வழ: மூன்று எதிரிகளும் இருந்தார்களா?

நீதிபதி: ஆம்.

வழ: விசாரணைகள் எத்தனை மணிக்கு முடிவடைந்தது?

நீதிபதி: பிற்பகல் 1-45.

வழ: அந்த இடத்தில் யாராவது வாக்குமூலம் அளித்தார்களா?

நீதிபதி: ஆம்.

வழ: யார் வாக்குமூலமளித்தார்கள்?

நீதிபதி: குட்டிசாமிஐயரும், மாலுப்பிள்ளை கந்தையாவும்.

வழ: எதிரிகளை பிஸ்காலின் பாதுகாப்பில் இருக்கும்படி கட்டளையிட்டீர்கள்?

நீதிபதி: ஆம்.

வழ: எதிரிகள் பிஸ்கால் பாதுகாப்பிலிருந்தார்களா? பொலிஸ் பாதுகாப்பிலிருந்தார்களா என்று உங்களுக்கு சொல்லமுடியாது?

நீதிபதி: ஆம்.

வழ: எதிரிகள் எத்தனையாம் திகதிவரை ரிமாண்டில் வைக்கப்பட்டார்கள்?

நீதிபதி: 25-ம் திகதிவரை.

வழ: மூன்றாவது எதிரி ஒரு பெண் பிஸ்காலின் துணையுடன் கோர்ட்டிற்குக் கொண்டுவரப்பட்டார்?

நீதிபதி: ஆம்,

வழ: வாக்குமூலம் பதிவு செய்த இடத்திற்கு கந்தோர் காரியாலயத்தைக் கடந்துதான் போக வேண்டும்.

நீதிபதி: ஆம்.

வழ: வாக்குமூலம் பதிவு செய்யப் போகும் வழியில் பொலிஸ் இன்ஸ்பெக்டரோ அல்லது வேறு யாருமோ மூன்றாவது எதிரியிடம் நேரடியாகவோ, அல்லது பிஸ்கால் மூலமோ தொடர்பு கொண்டார்களா இல்லையா என்று உங்களால் சொல்லமுடியாது?

நீதிபதி: என்னால் சொல்ல முடியாது.

வழ: வாக்குமூலம் பதிவு செய்யப்படுமுன்பு மூன்றாவது எதிரியுடன் யாராவது தொடர்பு கொண்டார்களா? இல்லையா? என்று உங்களால் சொல்ல முடியாது?

நீதிபதி: என்னால் சொல்ல முடியாது.

வழ: இப்படியான வாக்குமூலங்கள் முன்பும் பதிவு செய்திருக்கிறீர்களா?

நீதிபதி: இப்படிப்பட்ட 4 வாக்குமூலங்கள் பதிவு செய்துள்ளேன்.

முதலாவது எதிரி சார்பில் ஆஜரான திரு. ஆர். டி. சிவகுருவும்,மாஜிஸ்டிரேட் திரு. ஏ. வைத்திலிங்கத்தை குறுக்கு விசாரணை செய்தார்.

இம்மாதம் 8-ந் திகதிவரை இவ்வழக்கு ஒத்திபோடப்பட்டுள்ளது.

## முற்போக்கு நடவடிக்கைகளை தடைசெய்யும்

மானவல்ல, புதன்

அரசாங்கத்தின் முற்போக்கு நடவடிக்கைகளைத் தடைசெய்வதற்காகவே இடதுசாரிக் கட்சிகள் ஒன்றுபட்டுள்ளதாக உள்நாட்டு விடமைப்பு மந்திரி திரு. மகாம சமரவீரா கிராம முன்னேற்றச் சங்கக் கூட்டமொன்றிற்குத் தலைமைவகித்துப் பேசுகையில் தெரிவித்தார்.

வேலைநிறுத்தங்களை உண்டாக்கி அதன் மூலம் அரசாங்கத்தின் முற்போக்கு நடவடிக்கைகளைத் தடைசெய்வதற்காகவே இடதுசாரிக் கட்சிகள் ஒன்றுபட்டுள்ளதாகவும், அலரி மாளிகையைப் பிடிப்பதற்குத் தொழிலாளர்கள் மூலம் போராடப்போவதாக அறிவித்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார். அரசாங்கம் ஒவ்வொரு தொழிலாளிக்கும், விவசாயிக்கும் பாதுகாப்பு அளித்து வருவதால் மக்கள் இடதுசாரிகளுக்கு இடமளிக்கமாட்டார்கள் எனவும் மந்திரி தெரிவித்தார்.

## கந்தபுராண படிப்பு

மாவிட்டபுரம், புதன்

மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயிலில் வருடந்தோறும் நடைபெறும் கந்தபுராணப் படிப்பு வெள்ளிக்கிழமை ஆரம்பமாகி நடைபெறவிருக்கிறது.

## தமிழ் தொழிலாளர்கள்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கையில் திரு. எம். தம்பிமுத்து குறிப்பிட்டார். எழுதுவினைஞர் சங்க ஆதரவில் நடைபெற்ற இக்கூட்டத்தில் அவர் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:

தமிழ் பேசும் தொழிலாளர்கள் இன்று என்றுமே கண்டிராத இன்னல் சூழ்ந்த நிலையிலும், பல பக்கத்தாலும் தங்களை ஓர் நெருக்கடியான நிலைக்குக் கொண்டுவந்துள்ள துன்பமான சூழ்நிலையிலும் மனம் கலங்கியிருக்கிறார்கள். தேசிய தொழிற்சங்கங்கள் எமக்கு ஏற்பட்ட இன்னல்களை எங்களது பறிபோன உரிமைகளை நாங்கள் மனிதவர்க்கம் என்ற அளவில்கூட நடமாட முடியாதபடி எமக்கு இழைக்கப்பட்ட கொடுமைகளை நீக்கப் பாடுபடுமென எண்ணியிருந்த நாம், ஈற்றில் அச்சங்கங்கள் ‘பசுத்தோல் போர்த்த புலி’ உருவில் எம்மை கைவிட்டுச் சட்டத்துக்கு அமைந்து போங்கள் அல்லது எம்மை விட்டு அழிந்துபோங்கள் என்ற முழக்கம் எழுப்பியவுடன் தான் நாம் கண்விழித்தோம்.

தொழிலாளர் புரட்சிக்கு வித்திட்ட லெனின் கூறியதற்கிணங்க தேசிய இனங்கள் விடுதலை பெற்றபின்புதான் சமத்துவ அடிப்படையில் தொழிலாளர்கள் ஒற்றுமைப்பட முடியும். தமிழ்பேசும் தொழிலாளர்கள் தங்கள அடிப்படை உரிமைகளைக் கூட இழந்த நிலையில் உலகத் தொழிலாளர்களுடன் ஒன்று படுங்கள் என்று கூறுவதில் பொருளில்லை. இப்படியான பசப்பு வார்த்தைகளால் தத்துவம் பேசி தமிழ் பேசும் தொழிலாளர்களை ஏமாற்றிய காலம் ஓர் முடிவுக்கு வருகி...

### வாய்மூடியது எதற்காக?

தேசியம் பேசும் தொழிற்சங்கங்கள் சிங்களத் தொழிலாளர்களின் சில்லறைப் பிரச்னைகளுக்கெல்லாம் வேலைநிறுத்தம் பலதடவை செய்துள்ளன. ஆனால், தொழிலாளர்கள்என்ற வகையிலாவது தமிழ் அரசாங்க ஊழியர்களின் ஊதிய உயர்வும் பதவி உயர்வும் மறுக்கப்பட்டும் மொழிக்கொள்கையின் விளைவாக பலவித இன்னல்கட்கு உள்ளாக்கப்பட்டும் ஓர் மாற்றாந்தாய் பிள்ளைஎன்ற அடிப்படையில் நிர்ப்பந்தத்துக்குள்ளான இச்சமயத்தில் இவர்கள் வாய்மூடி ஊமைகளாவது எதற்காக? இதுமட்டுமல்ல, இந்நாட்டில் பெருந்தொகையான எண்ணிக்கை கொண்ட மலைநாட்டுத் தொழிலாளர்களின் ஜீவாதார உரிமைகள் பறிக்கப்பட்டபோது, பறிக்கப்பட்டு இன்று அவல நிலைக்கு கொண்டுவரப்பட்டுள்ள இந்தச் சந்தர்ப்பத்திலாவது ஏதாவது அவர்களுக்கு கைகொடுக்க அல்லது நேரடி நடவடிக்கைஎடுக்க பின்நிற்பதேன்? காரணம்இவர்கள் தமிழ்ப்பேசும் தொழிலாளர்கள்! இந்த உண்மையை அவர்கள் மறைக்கவோ அல்லது மறுக்கவோ முடியாது. தமிழ்ப் பேசும் தொழிலாளர்கள் எக்கேடு கெட்டால் என்ன என்ற வகுப்புவாதம் அவர்களிடம் உரமாக வேரூன்றிவிட்டது.

இந்நாட்டின் தொழிற்சங்க வளர்ச்சிக்கு முன்னோடிகளாய் தியாகிகளாய், இரத்தஞ்சிந்தி கொள்கை வளர்த்த ‘பெருமை பெருமளவுக்கு எமக்குண்டு

# “இடதுசாரி ஐக்கியமுன்னணி ஒரு மண்குதிரை!

## தமிழ் தொழிலாளர் அதை நம்பி ஏமாறக் கூடாது”

### எழுது வினைஞர் சங்க மேதின கூட்டத் தீர்மானங்கள்

யாழ்ப்பாணம், வியாழன் துக்கு

நேற்று மாலை யாழ்ப்பாணம் நகரமண்டபத்தில் அரசாங்க எழுதுவினைஞர் சங்கமும் மற்றும் சில சங்கங்களும் சேர்ந்து நடத்திய மேதினக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் வருமாறு:

1956-ம் வருடத்திலிருந்து இந்நாட்டு வரலாற்றில் ஏற்பட்டுவரும் சமூக அரசியல் நிகழ்ச்சிகளை ஆராயும்பொழுது இன, மொழி வேற்றுமை கடந்த தொழிலாளர் ஒற்றுமை வெறும் கற்பனைவாதமாகவும் உண்மை நிலைக்கு ஒவ்வாத கொள்கையாகவும் இருக்கிறதென்பதை தெரியப்படுத்த விரும்புகின்றோம்.

2. மார்க்ஸிஸக் கட்சியென்று தம்மைக் கூறிக் கொள்ளும் கட்சிகளும் அவற்றின் ஆதிக்கத்தின்கீழ் இயங்கும் தொழிற்சங்கங்களும் வகுப்புவாத அரசியல் பிடியிலிருந்து தங்களை விடுவித்துக் கொண்டு தமிழ்ப்பேசும் தொழிலாளர்களின் உரிமைகளுக்குப் போராட மறுத்ததன் விளைவாக அவர்கள் காட்டிக்கொடுத்துவிட்டார்களென்பதை அவர்களின் நடவடிக்கைகள் தெளிவாக எடுத்துக்காட்டுவதால் தமிழ்ப்பேசும் தொழிலாளர்கள் அவர்கள்மேல் முற்றாக நம்பிக்கை இழந்துவிட்டார்களென்பதோடு இப்போது தோன்றியுள்ளதாகச் சொல்லப்படும் இடதுசாரி ஐக்கிய முன்னணியை தொழிலாளர்வர்க்கத் விரோதமான சட்டங்களையும் வகுப்புவாத சட்டங்களையும் உருவாக்கிய ஒருவரை கூட்டாகக் கொண்ட ஐக்கிய முன்னணி என்னும் மண் குதிரையை நம்பாது கனியார்துறை பொதுத்துறையிலுள்ள தமிழ்ப்பேசும் தொழிலாளர் உடனடியாக மொழிவழி பிரித்து தமக்கெனத் தனியான தொழிற்சங்கங்களமைத்து தமது நீதியான உரிமைகளுக்காக போராடும்படி கேட்டுக் கொள்ளுகின்றோம்.

மேலும் மனிதவரலாற்றில் ஒரு இனமக்களின் உரிமைகளைப் புதைத்து அவற்றின் சவக்குழிமேல் இன்னொரு மக்களின் வாழ்வு கட்டி எழுப்பப்படவில்லை என்ற உண்மையை ஆளும் கட்சிக்கு சுட்டிக்காட்டுவதோடு அக்கட்சி சட்டமூலமாகவும் நிர்வாகமூலமாகவும் செய்துவரும் பாரபட்ச நடத்தைகளால் ஒருகாலம் நிம்மதியுடனும் சுபீட்சத்துடனும் இருந்துவந்த இந்நாட்டில் சாவையும் அழிவையும் தேடிக்கொண்டதேயன்றி வேறொன்றுமில்லை என்பதையும் எடுத்துக்காட்டி இந்நாடு ஐக்கியமாகவும் செல்வம் கொழிக்கும் நாடாகவும் திகழ வேண்டுமென்பதற்காக வேறும் சமத்துவ அடிப்படையில் சகலஇன மக்களின் ஒத்துழைப்பை நாட வேண்டிய வழிவகைகளைக் கையாண்டு கொள்ளும்படி கேட்டுக் கொள்ளுகின்றோம்.

## ஐயாறன்

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

தீவு, பூநகரி முதலிய ஊர்களிலும் குடியேற்றத் திட்டங்களிலும் மக்கள் ஏராளமாக வந்து வழிபட்டு, இளநீர், கரும்பு, உணவுகள் எல்லாம்கொடுத்து பெரிதும் உபசரித்ததாயும், மக்களிடையே பெரும் உற்சாகம் நிலவியதாகவும், நேரில் பார்த்தவரொருவர் தெரிவிக்கின்றார். கேதீச்சரத்தில் நாவலர் மடத்திலே புதிய மூர்த்திகளை வைத்து, பின்னர் கோயிலில் சகல வைபவங்களுடன் சேர்த்தனராம்.

இந்தக் கடுங் கோடையிலே சமார் நூறு மைல் நடந்து சென்று, இப் பெரிய கைங்கரியத்தைச் செய்த, விளம்பரம் விரும்பாத, அந்த அன்பர்களின் பக்தி தான் எவ்வளவு!

* * *

அத்தாவுன் அடியேனை அன்பாலார்த்தாய் அருள் நோக்கில் தீர்த்த நீராட்டிக் கொண்டாய், எத்தனையும் அரிய நீ எளியை யானைய் எனை யாண்டு கொண்டிரங்கி யென்று கொண்டாய், பித்தனேன் பேதையேன் பேயேன் நாயேன் பிழைத்தனகள் எத்தனையும் பொறுத்தாயன்றே, இத்தனையும் எம்பரமோ ஐய ஐயோ எம்பெருமான் திருக்கருணை யிருந்தவாறே.

—திருநாவுக்கரசர்

## தளபதிகளுடன் மவுண்பேட்டன் ஆலோசனை

புதுடில்லி, மே 1

புதுடில்லி வந்துள்ள மவுண்பேட்டன் பிரபு இன்றுகாலை இந்திய பாதுகாப்பு மந்திரி திரு. சவானைச் சந்தித்துப் பேசினார். முப்படைத் தளபதிகளையும் அவர் பின்னர் சந்தித்து ஆலோசனை நடத்தினார்.

# அருணகிரிநாதர் இசைவிழா நிகழ்ச்சிகள்

**கொழும்பு கலை பிரச்சாரசபையினரின் ஆதரவில் ஸ்ரீ அருணகிரிநாதர் இசைவிழா நாளை வெள்ளிக்கிழமை முதல் ஞாயிற்றுக்கிழமை வரை வெள்ளவத்தை சம்மாங்கோட்டார் ஆலய மண்டபத்தில் நடைபெறுகிறது.**

## (3-5-63) வெள்ளிக்கிழமை மாலை.

5.15 - 6.30 — "கதாப்பிரசங்கம்"
திரு. இரா. சிவ அன்பு அவர்கள்.
" T. P. ஜேசுதாசன் — வயலின்.
" A. M சந்திரசேகரன் — மிருதங்கம்.
6-30-7-15 — இசைமணி திருமதி. மோகனும்பிகை கணேசன் — பாட்டு
இசைமணி திரு. K.சித்திவிநாயகம் —வயலின்
திரு. K. ஷண்முகம்பிள்ளை — மிருதங்கம்
7-15 - 8-00 — சங்கீதபூஷணம் திரு. N. ராஜா — பாட்டு
திரு. T. P. ஜேசுதாசன் — வயலின்
" K. K. அச்சுதன் — மிருதங்கம்
8-00 - 8-15 — தலைவர், போஷகர் — தலைமையுரை
8-15 - 8-45 — திரு. S. முத்துலிங்கம் — பாட்டு
" K. சித்திவிநாயகம் — வயலின்
" A. கணேச சர்மா — மிருதங்கம்
8-45 - 9-30 — இசைமணி திரு. V. நடேசன் — பாட்டு
திரு. T. V. பிச்சையப்பா — வயலின்
" A. சந்தான கிருஷ்ணன் — மிருதங்கம்
9-30 — திருமதி. சரஸ்வதி பாக்கியராசா — பாட்டு
திரு. P. வைத்தியநாத சர்மா — வயலின்
" T. இரத்தினம் — மிருதங்கம்

## (4-5-63) சனிக்கிழமை மாலை

5-15 - 6-00 — "திருப்புகழ் பஜனை"
பங்குபற்றுவோர்:
திரு. A. வேலுசாமி
" T. P. ஜேசுதாசன் — வயலின்
" A. M. சந்திரசேகரன் — மிருதங்கம்
6-00 - 6-45 — சங்கீதபூஷணம் செல்வி நாகம்மா கதிர்காமர் — பாட்டு
திரு. K. சித்திவிநாயகம் — வயலின்
" A. கணேச சர்மா — மிருதங்கம்
6-45 - 7-45 — சங்கீதபூஷணம் திரு. T.ராஜலிங்கம்—பாட்டு
திரு. S. சோமாஸ்கந்த சர்மா — வயலின்
" K. ஷண்முகம்பிள்ளை — மிருதங்கம்
7-45 - 8-00 — தலைவர், போஷகர் — தலைமையுரை
8-00 - 8-30 — சங்கீதபூஷணம் செல்வி தங்கலக்ஷ்மி செல்லத்துரை — பாட்டு
திரு. T. P. ஜேசுதாசன் — வயலின்
" K. K அச்சுதன் — மிருதங்கம்
8-30 - 9-15 — திரு. K. R. நடராஜா — பாட்டு
" V. K. குமாரசாமி — வயலின்
" T. இரத்தினம் — மிருதங்கம்
9-45 - 9-45 — செல்வி ராஜலக்ஷ்மி ஜெகநாதன் — பாட்டு
திரு. P. வைத்தியநாத சர்மா — வயலின்
" T. பாக்கியநாதன் — மிருதங்கம்
9-45 மகாராஜபுரம் திரு. சந்தானம் — பாட்டு
திரு. T. V. பிச்சையப்பா ... வயலின்
" A. சந்தானகிருஷ்ணன் — மிருதங்கம்
" A. கணேச சர்மா — கஞ்சிரா
" K. K. அச்சுதன் — கடம்

## (5-5-63) ஞாயிற்றுக்கிழமை மாலை

5-15 - 6-00 — "தாளவாத்யக கச்சேரி"
சங்கீதபூஷணம்
திரு. A. S. இராமநாதன் }
திரு. T. பாக்கியநாதன் } மிருதங்கம்
செல்வன் R. பிரகலாதன் }
குமுக்கா திரு. K. கணபதிப்பிள்ளை — கஞ்சிரா
திரு. K தமிழ்நாதன் — கடம்
திரு. S சோமாஸ்கந்த சர்மா — வயலின்
6-00 - 630 — சங்கீதபூஷணம் செல்வி லீலாவதி கந்தையா — பாட்டு
திரு. K சித்திவிநாயகம் — வயலின்
" A. சந்திரசேகரன் — மிருதங்கம்
6-30 - 7-15 — திரு. M. வர்ணகுலசிங்கம் — பாட்டு
" P. வைத்தியநாத சர்மா — வயலின்
" K. ஷண்முகம்பிள்ளை மிருதங்கம்
7-15 - 8-00 — திரு. S ஸ்ரீதாஸ் — புல்லாங்குழல்
" T. V. பிச்சையப்பா — வயலின்
" A. சந்தானகிருஷ்ணன் — மிருதங்கம்
8-00 - 8-15 — தலைவர், போஷகர் — தலைமையுரை
8-15 - 9-00 — திருமதி. அம்பிகா தாமோதரம் } பாட்டு
செல்வி ஞானா சிவசுப்பிரமணியம் }
திரு V K. குமாரசாமி — வயலின்
" T. இரத்தினம் — மிருதங்கம்
9-00 - 9-30 — செல்வி கௌரி சிவசம்பு — பாட்டு
திரு. T. V. பிச்சையப்பா — வயலின்
" திரு T பாக்கியநாதன் — மிருதங்கம்
9-30 — திரு. A. G. ஐயாகண்ணு தேசிகர் — பாட்டு
" S. சோமாஸ்கந்த சர்மா — வயலின்
" A. S. இரமநாதன் — மிருதங்கம்
" குமுக்கா K. கணபதியாபிள்ளை — கஞ்சிரா
" K. K. அச்சுதன் — கடம்

மூன்று நாட்களிலும் நடைபெறும் விழா நிகழ்ச்சிகளில் பங்குபற்றிப் பக்கவாத்தியம் வாசிப்பவர்கள்

**கஞ்சிரா**
திரு. குமுக்கா K. கணபதியாபிள்ளை
" K. சுப்பிரமணியம்

**கடம்**
திரு. K. தமிழ்நாதன்

**மோர்சிங்**
R. சோமநாதன்

குறிப்பு: மூன்று நாட்கள் நடைபெறும் நிகழ்ச்சிகளின் சில பகுதிகள் இலங்கை வானொலி நிலையத்தாரால் அஞ்சல் செய்யப்படும். [நிகழ்ச்சிகள் யாவும் மாறுதலுக்குட்பட்டது.]

**வெள்ளிக்கிழமை**
தலைவர்: V. ஏரம்பமூர்த்தி
போஷகர்: T. சீனிவாசகம்
(ரசிக ரஞ்சனசபாத் தலைவர்)

**சனிக்கிழமை**
தலைவர்: மகாராஜபுரம் சந்தானம்

**ஞாயிற்றுக்கிழமை**
தலைவர்: அறிவிக்கப்படும்.

# கலை அரங்கம்

## பகலில் பாம்பு, இரவில் அழகிய நங்கை!
### கேசவன் பிலிம்ஸ் தயாரிப்பில் புதுமை

ஒரு அழகிய நங்கை. அனைவரையும் வசீகரிக்கும் எழில் படைத்தவள். ஆனால் அந்தோ பாவம்! அவள் ஒருமந்திரவாதியின் மாயவலையில் சிக்குகிருள். விளைவு? அவன் அவளை ஆட்டிவைக்கிறன்; பகலிலே பாம்பாக மாறிவிடுகிருள் அந்த நங்கை.

தன்பேரிலுள்ள சாபம் தன் காதலனுக்குத் தெரியக்கூடாதென்று மறைத்து வைக்க முயல்கிருள் நங்கை. அதனால் ஏற்படும் சிக்கல்களைக் கொண்ட விறுவிறுப்பான கதையொன்றை கேசவன் பிலிம்சார் தங்களது முதல் தயாரிப்பாக மெஜஸ்டிக் ஸ்டுடியோவில் வளர்த்து வருகின்றனர்.

இப்படத்திற்காக அதிகம் பொருட்செலவில் பம்பாயிலிருந்து பல சாகஸங்கள் செய்யக் கூடிய பாம்பை விலைக்கு வாங்கியிருக்கின்றனர்.

பாம்பு நங்கையாக மாலினியும் அவரது காதலனுக புதுமுகம் ராஜனும் நடிக்கும் இப்படத்தில் மற்றும் இந்திராதேவி, மனோரமா, எம். எஸ். எஸ். பாக்கியம், நாகேஷ், வி. எஸ். ராகவன், வைரம் கிருஷ்ணமூர்த்தி ஆகியோர் நடிக்கின்றனர்.

ஏ. எல். நாராயணன் கதை வசனம் எழுத, கே. வி. மகாதேவன் இசையமைக்க, எஸ். ராகவன் இப்படத்தை டைரக்ட் செய்கிருர்.

## "நிலவும் இரவும் வளரட்டுமே நம் இன்ப நினைவுகள் தொடரட்டுமே"
### இரத்ததிலகத்தில் கண்ணதாசன் பாடல்

மெஜஸ்டிக் ஸ்டுடியோவின் ஒலிப்பதிவு அரங்கிலிருந்து மிகவும் அருமையான பாடலின் இசை காற்றில் தவழ்ந்து வந்தது. "நிலவும், இரவும் வளரட்டுமே, நம் இன்பநினைவுகள் தொடரட்டுமே" என்று பி. சுசீலாவும், டி. எம். சவுந்தரராஜனும் பாட, டி. எஸ். ரங்கசாமி ஒலிப்பதிவு செய்து கொண்டிருந்தார். இசையை விஸ்வநாதன் ராமமூர்த்தி டைரக்ட் செய்ய படத்தில் நடிக்கப்போகும் சிவாஜகணேசன் இசையை ரசித்துக் கேட்டுக் கொண்டிருந்தார்.

இப்பாடல் மெஜஸ்டிக்ஸ்டுடியோவில் துரிதமாகத் தயாராகிவரும் நேஷன்ஸ்மூவிஸ் "இரத்ததிலகம்" படத்திற்காக ஒலிப்பதிவு செய்யப்பட்டது.

சிவாஜிகணேசனும் சாவித்திரியும் இணைந்து நடிக்கும் இப்படத்தில் மற்றும் எம். என். நம்பியார், நாகேஷ், புஷ்பலதா, மனோரமா ஆகியோர் நடிக்கின்றனர். சென்ற வாரம் சிவாஜிகணேசன், புஷ்பலதா பங்குகொண்ட கனவுக்காட்சி பாடலொன்று படமாக்கப்பட்டது.

கதை, வசனம், பாடல்களை கண்ணதாசன் கவனிக்க, கே. வி. மகாதேவன் இசையமைக்கும் இப்படத்தை பஞ்சு அருணாசலம் தயாரிக்க தாதாமிராஸி டைரக்ட் செய்கிருர்.

## தமிழ் நாட்டில் ஆங்கிலப்படம்

பல தமிழ்ப்படங்களில் துணை நடிகராக நடித்த ஹாகப் காஷ்மீரி, தேசப் பாதுகாப்பைக் கருப்பொருளாகக் கொண்டு ஆங்கிலப்படம் ஒன்றை இங்கு தயாரிக்கப்போகிருர்.

இப்படத்திற்கு "உங்களுக்கும் நேரலாம்" என்னும் பெயர் சூட்டப்பட்டு இது "இந்தோ-ஓவர்சீஸ் ஃபில்ம்ஸ்" என்னும் நிறுவனத்தின் பெயரில் தயாரிக்கப்படவிருக்கிறது.

இப்படத்தில் நடிப்பதற்குப் புது முகங்களைத் தேடிக்கொண்டிருப்பதாக ஹகாப் காஷ்மீரி நேபன் செய்தியாளரிடம் கூறினர். இப்படத்தில் சில ஐரோப்பியரோ, ஆங்கிலோ இந்தியரோ நடிக்கலாம் என்றும் அவர் குறிப்பிட்டார்.

இப்படத்தில் முக்கியமான பாகம் ஏற்று நடிககப்போகும் ஹகாப் காஷ்மீரியே படத்தை டைரக்டும் செய்வார். மாடர்ன் தியேட்டர்சாரின் தமிழ்ப்படமான "சித்ரா" குப்பி கம்பெனியின் கன்னடப் படமான "ஜீவன் நாடக்" சிங்களப்படமான "பண்டாவின்பட்டணப்பிரவேசம்" ஆகியவற்றை இவர் டைரக்ட் செய்திருக்கிருர்.

## ஜெமினி கணேசன் காய்கறி வாங்கினர்!

ஜெமினி கணேசன் கடைவீதிக்குச்சென்று காய்கறி வாங்கினர். இது சினிமாவுக்காக விடுக்கப்பட்ட காட்சியல்ல. உண்மையில் நடைபெற்றது.

சென்னையில் நெருப்புப் போல வெய்யில் கொளுத்துகிறது. இதற்காக ஜெமினி கணேசன் கொடைக்கானலுக்கும் சென்றிருக்கிருர். ஜெமினி கணேசன் காய்கறி வாங்க கடைத்தெருவுக்குப் போயிருந்தார். செய்தி காட்டுத் தீ போல எங்கும் பரவியது. ரசிகர்கள்கூட்டமாகக்கூடி 'காதல் மன்னன் ஜெமினி கணேசன், என்று கூச்சலிட்டனர். நிலைமையைச் சமாளிக்க முடியாத கணேசன் காரிலேறிச் சென்றுவிட்டார்.

நாடகவிமர்சனம்

## "புயலில் ஒரு மலர்"

பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில், அண்மையில் காலைக்ககதிரவன்ன்னியர் கழகத்தினரின் 'புயலில்ஒரு மலர்' என்ற சமூக நாடகம் அரங்கிடப்பட்டது. கன்னியர்பலர் ஒன்று கூடி இந்தநாடகத்தைத் தயாரித்திருக்கிருர்கள் என்று அறிந்ததும் 'எப்படி இருக்குமோ?' என்ற ஐயப்பாட்டுடனே தான் நாடகம் பார்க்கச் சென்றேன். மண்டபத்துக்கு வெளியே மாவிலைத் தோரணங்களையும், வாழைமரங்களையும் கண்ட போதே,ஆகா, கன்னித் தமிழ் மணம் வீசுகிறதே, என்ற பெருமிதத்துடன் உள்ளே நுழைந்தேன்.

"காசிநாதர் என்ற ஒரு ஏழைக் குமாஸ்தா. அவருக்கு சுகுணு ஒரு மகள்; கல்லூரி மாணவிகளுடன் ஒரு நாள் 'பிக்னிக்' போகிருள் சுகுணு. காலில் முள் தைக்கின்றது. சிகிச்சைக்கென டாக்டர் 'ரமேஷ்' என்பவரிடம் அழைத்துச் செல்கின்றனர். அவரிடம் தன் மனதைப் பறிகொடுக்கிருள் சுகுணு. அவரும் சுகுணுவின் எழிலில் மயங்குகிருர். டாக்டரை இன்னெரு பெண்ணும் நேசிக்கிருள். அவள் தான் டாக்டரிடமே நர்ஸ் வேலை பார்க்கும் 'குமுதா'. காசிநாதரிடம் பெண்கேட்டுப் போகிருர் ரமேஷ். அவர்தான் ஏற்கனவேவேறொருத்தருக்கு வாக்குக் கொடுத்து விட்டதாயும் சுகுணுவை மறந்து விடும் படியும் டாகடரிடம் கூறுகின்ருர். மனமுடைந்து வீடு திரும்பும் டாக்டர், மதுவே கதியென எண்ணிக் குடிக்கப் போகும் சமயத்தில் நர்ஸ் குமுதா குறுக்கிடுகின்ருள். இருவருக்கும்வாக்குவாதம்; முற்றி, ஈற்றில் குமுதாவே ஜெயிக்கிருள். இது சமையம் காசிநாதரின் மனம் மாறி சகுணுவை டாக்டருக்கு மணமுடிக்க ஒப்புக்கொள்கிருர். ஆனல் விதி வேறு விதமாகி, 'டாக்டர் — குமுதா' திருமணம் நடந்துவிடுகின்றது. 'புயலில் சிக்கிய மலராகிய' சுகுணு இறைவன்பால் அன்பு செலுத்தும் நோக்கம் கொண்டு ஒரு மகரிஷியின் சிஷ்யை ஆகிருள்." இதுவே நாடகத்தின் கதைச்சுருக்கம்

இந்தக்கதையும் வசனத்தையும், செல்வி கலாநிதி சீவரத்தினம் என்பவரே எழுதினர் என்று அறிகிறேன். வசனம், பல இடங்களில் அபாரம் என்று சொல்லும்படி இருந்தது.

சுகுணுவாக நடித்த செல்வி சரோஜினி பழனிசாமி, தன் பாத்திரத்தை உணர்ந்து திறம்பட நடித்தார். நர்ஸ் குமுதாவாக வந்த செல்வி மாலினி சின்னத்தம்பியின் நடிப்பு நன்ருக இருந்தது. "தாயே யசோதா" என்ற பாடலுக்கு அவரது நடனம், பிரமாதமாக அமைந்திருந்தது. காசிநாதராக வந்த செல்வி நளினி நல்லையா அந்தப்பாத்திரமாகவே மாறி, திறம்படநடித்து ரசிகர்களின் பாராட்டுதல்களைப் பெற்ருர். டாக்டர் ரமேஷாக நடித்த செல்வி கலாநிதியின் நடிப்பு ஆனல், ஏன்தான் அவர் கனகச்சிதம். சிவாஜி கணேசனின் பாணியைப் பின்பற்றுகிருரோ? ஹாஸ்ய ஜோடி கோபாலும் (புவனலோசினி வேலுப்பிள்ளை) சுமதியும் (வசந்தகுமாரி பழனிசாமி) நன்ருக நடித்தார்கள். டாக்டரின் நண்பன் குமாராக நடித்த செல்வி வசந்திரா செல்லையாவிடம் துடுக்குத்தனம் நிறைந்த நடிப்பைக் காணமுடிகிறது. மற்றும் செல்விகள் விமலராணி சீவரத்தினம், மெல்ரோஸ், அலக்ஸாந்தர், ஆகியோரதும், செல்வன் எஸ்.பாலச்சந்திரனதும் நடிப்பில் குறை கூற இடமில்லை.

இந்த நாடகத்தை நட்டுவாங்கம் செய்த செல்வி கலாநிதி சீவரத்தினம் பாராட்டுக்குரியவரே!

காலைக்கதிரவன் கன்னியர் கழகத்தினரின் கன்னி முயற்சியான இந்த நாடகம், அவர்களுக்கு வெற்றி அளித்துள்ளது என்பதில் ஐயமில்லை.

— "ரீ. ஆர்."

# "மக்களை நற்பிரஜைகளாக்க விளையாட்டு உதவுகிறது"

## சென். நிக்கிலஸ் சனசமூக விளையாட்டு போட்டியில் பேச்சு

யாழ்ப்பாணம், புதன்

"நாட்டுமக்களை நற்பிரஜைகளாகவும், உற்சாகமுள்ளவர்களாகவும், சகோதரத்துவ நோக்குடையவர்களாகவும் மேம்படச்செய்வதற்கு விளையாட்டு இன்றியமையாததாயிருக்கின்றது. இவ்விதமான விளையாட்டில் மக்களைப் பங்குபற்றி இன்புறச்செய்வதன் மூலம் நமது நாட்டிலே சுபிட்சத்தை ஏற்படுத்தக்கூடியதாயிருக்கும்."

இவ்வாறு, நாவாந்துறை சென். நிக்கிலஸ் சனசமூகநிலையத்தினரால் நடாத்தப்பட்ட விளையாட்டுப் போட்டியில் பிரதம விருந்தினராகக்கலந்து கொண்ட 12-ம் வட்டாரப் பிரதிநிதி குவாஸி எம். எம். சுல்தான் விளையாட்டுப்போட்டியில் வெற்றியீட்டியவர்களுக்குப் பரிசில்களை வழங்கும்போது கூறினர்.

வெற்றிபெற்றவர்களின் விபரம்வருமாறு:-

**ஊசிநூல் கோர்த்தல் பெண்கள்**

மா. யசிந்தா, சு. பத்திமா, தோ. பத்திமா.

**பணிஸ் சாப்பிடுதல் ஆண்கள்**

ம. மரியதாஸ்.

**சங்கீதத்தொப்பி போடுதல் ஆண்கள்**

கு. சூசைப்பிள்ளை, யோ. ஜெயபாலன், சி. ஞானதாஸ்.

**100 யார் ஓட்டம் பெண்கள்**

சு. தயாபரி, மா. யசிந்தா, டே. ராஜேஸ்வரி.

**100 யார் ஓட்டம் ஆண்கள்**

சு. சத்தியசீலன், செ.செல்வராசா, ஜே. இம்மானுவேல்.

**440 யார் ஓட்டம் ஆண்கள்**

சி. ஞானதாஸ், யோ. ஜெயபாலன், ஜே. அருள்ராசா.

**துவிச்சக்கரவண்டி மெதுவான ஓட்டம் ஆண்கள்**

மு. வின்சன், யோ. ஜெயபாலன், கு. சூசைப்பிள்ளை.

**சங்கீதக்கதிரை பெண்கள்**

மா. யசிந்தா, டே. ராஜேஸ்வரி, ச. தயாபரி.

**மாவுக்குள் காசுஎடுத்தல் ஆண்கள்**

செ. குணராசா, கு. மத்தியாஸ், சு. சத்தியசீலன்.

**கரண்டி ஓட்டம் பெண்கள்**

சு. தயாபரி, மா. யசிந்தா, அ. செ. சிசீலியம்மா.

**சோடாக் குடித்தல் ஆண்கள்**

த. அரியநாயகம், நீ. பீற்றர், கு. ஜேசுதாசன்.

**25 யார் ஓட்டம் சிறுபெண்கள்**

செ. ஜஸ்வரி, ச. டெய்ஸி.

---

# தாய்மாருக்கு வில்லைகள்

கொழும்பு, புதன்

ஏழு கோடியே 50 லட்சம் இரும்புச் சத்துள்ள வில்லைகள் இங்குள்ள தாய்மாருக்கென பிரிட்டனில் தயாரிக்கப்பட்டு வருகிறது.

கர்ப்பிணிகளுக்கெனத் தயாரிக்கப்பட்டுவரும் இந்த வில்லைகள் அடுத்த 9 மாதங்களில் இங்கு வந்து சேருமென எதிர்பார்க்கப்படுகிறது.

# நிதிமந்திரி தகுதியற்றவர்ராம்

மத்துகம, புதன்

"நாட்டில் நிலவும் பொருளாதார நெருக்கடிக்குக் காரணகர்த்தா நிதிமந்திரியே. நிதிமந்திரிப் பதவிக்கு அவர் தகுதியில்லாதவர். தான் கொண்டு வரும் நடவடிக்கைகளால் என்ன விளையும் என்பதைப் பற்றித் தெரியாமலே அவர் சில நடவடிக்கைகள் எடுத்திருக்கிறார்."

இவ்வாறு இங்கு நடைபெற்ற இடதுசாரி ஐக்கிய முன்னணிக் கூட்டமொன்றில் பேசுகையில் டாக்டர் என். எம். பெரேரா. தெரிவித்தார்

திரு. பெரேரா மேலும் தெரிவித்ததாவது:

நிதிமந்திரி எடுத்துக்கொள்ளும் நடவடிக்கைகள் பற்றிப் பாராளுமன்றத்தில் கேள்வி கேட்கப்பட்டால் அவற்றிற்குப் பதிலளிக்க முடியாமல் தனக்கு ஒன்றுமே தெரியாது எனக் காட்டிக்கொள்கிறார். நாட்டின் நிதிநிலைமை படுமோசமாக இருப்பதாகவும், அதனைக் கூப்பன் அரிசியில் குறைத்துக்கொள்வதன் மூலமே நிவர்த்திசெய்ய முடியும் என்றும் முன்னாள் நிதிமந்திரி திரு. பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்கா தெரிவித்திருந்தார். ஆனல் தற்போதைய நிதிமந்திரியோ அதற்கு நேர்மாருக நாட்டின் நிதிநிலைமை நல்ல நிலையிலுள்ளதாகத் தெரிவிக்கிருர். திரு. பீலிக்ஸ் சொன்னதற்கு எதிராகச் சொல்லவேண்டுமென்பதற்காகவே அவர் இப்படித் தெரிவித்துள்ளார்.

அரசாங்கம் எப்படிச் செய்வது என்று தெரியாமலே சில ஸ்தாபனங்களைத் தேசியமயமாக்கியுள்ளது. இடதுசாரிகளின் ஐக்கியம் திடமானது. அது நிரந்தரமானதென மக்கள் நம்பலாம்."

---

# குருடர்கள் குறைந்த நாடு

கொழும்பு, புதன்

ஆசிய நாடுகளில் இலங்கையில் தான் குருடர்கள் தொகை குறைவாக இருக்கிறது எனக் கணிக்கப்பட்டுள்ளது.

சுகாதார சேவை இங்கு மிக நல்ல நிலையில் இயங்கி வருவதாலேயே இவ்விதம் குருடர்கள் தொகை குறைவாக இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. குருடர்களுக்கான ரோயல் காமன்வெல்த் சங்க டைரக்டர் திரு. ஜோன் வில்சன் பத்திரிகையாளர் மகாநாட்டில் மேற்கண்ட தகவல்களைத் தெரிவித்துள்ளார்.

ஆசிய நாடுகளில் இலங்கையில் தான் குருடர்கள் குறைவாக இருந்தாலும் பிரிட்டன் பூராவுமுள்ள குருடர்களைவிட இங்குள்ள குருட்டுப் பிள்ளைகளின் தொகை அதிகமென திரு. வில்சன் தெரிவித்தார்.

இங்கு மொத்தம் 15,000 குருடர்கள் இருப்பதாகவும், இதில் 2,000 குருட்டுச் சிறுவர்கள் இருப்பதாகவும் திரு. வில்சன் கூறியுள்ளார்.

44 வயதுடைய திரு. வில்சன் 13 வயதிலேயே விபத்தொன்றில் சிக்கியதால் குருடராகிவிட்டார்.

---

# கடந்த ஆண்டு ஏற்றுமதி அதிகம்

கொழும்பு, செவ்வாய்

கடந்த ஆண்டு இலங்கையின் ஏற்றுமதி ரூ. 180 . 80 லட்சம் எனவும் இறக்குமதி ரூ. 160 கோடி எனவும் அறிவிக்கப்படுகிறது.

# வானொலி நிகழ்ச்சிகள்

## வியாழன் 2-5-63

## கொழும்பு

(செய்திகள்: காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

**காலை**

6-45 உதயகீதம், 6-50 சைவ நற்சிந்தனை, 6-55 இஸ்லாமிய நற்சிந்தனை, 7-15 தேர்ந்த இசை, 7-45 திரை இசை, 8-15 இஸ்லாமியகீதம்.

**பகல்**

12-00 சித்திரகானம், 1-00 கதம்ப இசை.

**மாலை**

5-00 பிறந்ததினவாழ்த்துக்கள், 5-15 ஓடிவிளையாடு பாப்பா, 6-45 திரை இசை, 6-15 சிராமசஞ்சிகை, 6-45 வாத்தியக்கோஷ்டி.

**இரவு**

7-00 டி. எஸ். அம்பலவாணர் — பேச்சு (செவிடருக்கு கல்வி கற்பித்தல்), 7-15 நேயர் விருப்பம், 7-45 மனோரஞ்சிதம் (தொடர்நாடகம்), 8-00 முஸ்லிம்நிகழ்ச்சி, 8-45 ஜனாபா ஏ. அலீஸ் — பாட்டு, 9-15 கவிக்கோவை, 9-30 குரல் வகை, 10-00 தமிழோசை (பி. பி. ஸி. அஞ்சல்).

## திருச்சி

(செய்திகள்: காலை 7-15, பகல் 2-00, இரவு 7-15)

**காலை**

6-45 மங்கள இசை, 6-50 ஸ்வாதித் திருநாள் மகாராஜாவின் நவராத்திரி கீர்த்தனை, 7-00 அருள் வாக்கு. 7-05 வாத்திய இசை, 7-35 டி. எம். எம். கமலா — முத்துத் தாண்டவர் பாடல்.

**பகல்**

12-00 தொழிலாளர்களுக்கு, 1-30 வாத்திய இசை, 1-50 குரல்இசை, 2-40 ஜெய பேரிகை.

**மாலை**

5-15 மெல்லிசை, 5-45 வாத்திய இசை, 6-20 கிராமநிகழ்ச்சிகள்.

**இரவு**

7-30 "அஜாமினே!பாக்கியானம் இசை" (தொடர்நாடகம்), 9-15 சுபத்தசங்கீதம், 9-30 "நன்றியுள்ள நன்கொடையாளர்கள்" — சித்திரம்.

---

# 'அநீதி இழைக்கப்படவில்லை'

கொழும்பு, புதன்

பெட்ரோலியம் கார்ப்பரேஷனில் ஜெனரல் மனேஜராக இருந்த திரு. சாம் சில்வாவுக்கு அநீதி அளிக்கப்பட்டதாகத் தம்மைப் பொறுத்தவரை தான் நினைக்கவில்லை என செனட்சபை முதல்வர் செனட்டர் ஏ. பி. ஜெயசூரியா செனட்டர் ரெஜி பெரேராவின் கேள்வியொன்றுக்குப் பதிலளிக்கையில் தெரிவித்தார்.

இதுபற்றி தாம் சம்பந்தப்பட்ட மந்திரிக்குத் தெரிவித்து தேவையெனக்கண்டால் அறிக்கையொன்று வெளியிட நடவடிக்கை எடுக்கப்படும் என செனட்டர் ஏ. பி. ஜெயசூரியா மேலும் தெரிவித்தார்.

# "நாட்டில் ஒற்றுமை நிலவ உணவும், உடையும் தேவை"

## நெசவு நிலையத் திறப்பு விழாவில் குவாஸி சுல்தான் பேச்சு

யாழ்ப்பாணம், புதன்

"நாட்டிலே ஏற்பட்ட பொருளாதார நெருக்கடியினல், மக்களிடையே ஐக்கியம் குறுகிக்கொண்டுவருகிறது. சமூக ஒற்றுமையை நாட்டிலே நிலைநாட்ட ஒவ்வொருமக்களுக்கும் உண்ண உணவும் உடுக்க உடையும் தட்டுப்பாடின்றிக்கிடைக்கக்கூடிய வகையில் நமது பொருளாதாரத்தை விருத்தி செய்தல் வேண்டும்.'

இவ்வாறு சென்நீக் கிலஸ் சன சமூக நிலயத்தில் ஆரம்பமான கைத்தறி நெசவு நிலயத்தைத் திறந்துவைத்துப் பேசிய 12-ம் வட்டாரப் பிரதிநிதி குவாஸி. எம். எம். சுல்தான் குறிப்பிட்டார்.

அவர் மேலும் கூறியதாவது: "இறக்குமதிக் கட்டுப்பாடு தீவிரமாக அமுலாக்கப்படும் இந்நாட்களிலே உள்நாட்டு உற்பத்திகளுக்கு அதிககிராக்கி ஏற்பட்டிருக்கிறது. எனவே நாவாந்துறைப் பெண்மணிகள் இவ்வரிய சந்தர்ப்பத்தை நல்ல முறையிலே பயன்படுத்தி நாட்டிலே பொருளாதார வளர்ச்சிக்கு அடிகோலவேண்டும்".

சென். நீக்கிலஸ் சன சமூக நிலயக் காரியதரிசி திரு. எப். பி. அந்தோனிப்பிள்ளை பேசுகையில் கூறியதாவது:- யாழ்ப்பாண நகரிலேயே மிகவும் சீர்கேடான நிலையிலுள்ள நமது வட்டாரம், நமது பிரதிநிதியின் முயற்சியினல் ஓரளவு முன்னேற்றமானநிலைக்குக்கொண்டு வரப்பட்டுள்ளது. பொருளாதார வளத்திலே குன்றியுள்ள நாம், நமக்குக் கிடைத்துள்ள இந்நெசவு நிலயத்தினூடாக பொருளாதாரத்தை விருத்தி செய்ய முன்வரவேண்டும்,

ஆண்களோ வேலையின்றித் திரியும் இந்நாட்களிலே வீட்டிலே வீண்பொழுதைக் கழிக்கும் பெண்கள், நெசவு நிலயத்தில் பயிற்சி பெறுவதன் மூலம் தங்கள் குடும்ப வருமானத்தை வளம்பெறச் செய்யலாம். குடும்ப வருமானம் வளர்வதால், பொருளாதார நெருக்கடியினல் ஏற்படும் கஷ்டங்களைச் சமாளிப்பதற்கு ஏதுவாயிருக்கும்.

வண. கட்டளைக் குரவர் வை. கரோவ் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் திரு. நீ. எஸ்தாக்கி, புதிய கிராம சேவையாளர் திரு. எம். சிவலிங்கம் நெசவு நிலய ஆசிரியர் திரு. தம்பையா ஆகியோரும் பேசினர்.

கூட்ட முடிவில் தேசிய கலா நாடக மன்றத்தினல் "கூடப் பிறந்தாலும்" என்னும் சமூக நாடகம் அரங்கேற்றப்பட்டது.

---

# "மயக்கம் தெளிந்துபார்த்தபோது சாரதி இறந்து கிடந்தார்"

## வசாவிளான் கார் விபத்து விசாரணையில் சாட்சியம்

மாவிட்டபுரம், புதன்

யாழ்ப்பாணம் பலாலி ரோட்டில் 8-ம் கட்டையில் (வசாவிளானில்) நடைபெற்ற கார் விபத்தில் நல்லூரைச் சேர்ந்த சரவணமுத்து சதாசிவம் (59 வயது) மரணமானதையொட்டி மல்லாகம் நீதிபதி திரு. வெஸ்லி டி. தாமோதரம் ஸ்தலத்தில் மரண விசாரணை நடத்தினர். யாழ்ப்பாணம் சாப்பல் வீதியைச் சேர்ந்த செல்லையா பிரேமநாதன் சாட்சியமளிக்கையில் கூறியதாவது:-

நான் சென்னையில் பி. எஸ். சி. படிக்கிறேன். இந்தியாவிலிருந்து 28-ம் திகாலை இங்கு வந்தேன். எனது மாமி திருமதி முத்துக்குமாரு வீட்டில் தங்கினேன். மாமி தான் விபத்துக்குள்ளான இக் காரின் உரிமையாளர். அன்று காலை 10 மணியளவில் காரை வாங்கிக் கொண்டு வசாவிளானுக்குச் சென்றேன். காலஞ் சென்றவரே அக்காரைச் செலுத்தி வந்தார். வசாவிளானில் இரு நண்பர்களை ஏற்றிக்கொண்டு கீரிமலைக்குச் சென்றேன். அங்கிருந்து வசாவிளான் வந்து நண்பர்களின் வீட்டில் சாப்பிட்டு விட்டு நாலரை மணியளவில் யாழ்ப்பாணம் திரும்பினேன். அப்பொழுதும் காலஞ் சென்றவரே காரை ஓட்டினர். நான் பின் ஆசனத்தில் சாரதிக்குப் பின் அமர்ந்திருந்தேன். கார் 40 மைல் வேகத்தில் சென்றுகொண்டிருந்தது. நான் அதிகம் சாப்பிட்டமையால் நித்திரையாகிவிட்டேன். இருந்தாற்போல் என்னவோ நடப்பது போலிருந்தது. உடனடியாக ஜன்னலால் எட்டி வெளியே பார்த்தேன். பின் என்ன நடந்ததென்பது தெரியாது.சிறிதுநேரத்தின்பின் மயக்கம் தெளிந்து பார்த்தபோது சாரதி இறந்து கிடக்கக் கண்டேன். பின் அங்கு நின்றவரின் உதவியுடன் சாரதியை ஒரு புறமாகத் தூக்கிக் கிடத்தினேன். நான் மட்டுமே சாரதியுடன் வந்தேன். நான் 'லைசென்ஸ்' உள்ள சாரதி. ஆனல் இப்படியான காரில் ஓடிப்பழக்கமில்லை. நான் அன்று காரை ஓட்டவில்லை."

வயிரவன் ஆறன் சாட்சியமளிக்கையில், விபத்துக்குள்ளான கார் வசாவிளானிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கி மிகவேகமாக வந்துகொண்டிருந்ததென்றும் கார் வளைந்து வளைந்து வந்து திடீரென ஓர் பக்கமாகச் சரிந்து வீழ்ந்து உருண்டதென்றும் கூறினர்.

திரு. முத்துக்குமாரு சாட்சியமளித்த பின் நீதிபதி இம்மாதம் 9-ம் திகதிவரை மேல் விசாரணையை ஒத்திவைத்தார்.

---

# 'விரைவில் கமிஷனை நியமியுங்கள்"

கொழும்பு,செவ்வாய்

காலம் சென்ற பிரதமரின் மரணத்துக்கு காரணமாயிருந்த அரசியல் நோக்கங்கள் குறித்து விசாரணை செய்வதற்கு விரைவில் ஒரு கமிஷனை நியமிக்குமாறு சுதந்திரக்கட்சியைச் சேர்ந்த கொழும்பு மத்திய வாலிப முன்னணியினர் பிரதமரைக் கோரியுள்ளனர்.

மேதின வேண்டுகோளாக இதைத் தாம் கோருவதாக அவர்கள் பிரதமரிடம் தெரிவித்துள்ளனர்.

---

# உல்லாச பிரயாணம்

கொழும்பு, செவ்வாய்

அடுத்த மாதம் 7, 8, 9-ம் திகதிகளில் மாலை 6 மணியிலிருந்து நள்ளிரவு 12 மணி வரை விமானத்தில் கொழும்பு எல்லையுள் உல்லாசப் பிரயாணம் செய்யக்கூடிய வசதிகளை எயர் சிலோன் மேற் கொண்டுள்ளது.

சென்ற வருடம் வெசாக் தின வைபவத்தையொட்டி ஆயிரத்திற்கும் அதிகமான உல்லாசப் பிரயாணிகள் இவ்விதம் விமானத்தில் உல்லாசப் பிரயாணம் செய்தார்கள்.

# "பொலிஸ் இன்ஸ்பெக்டர் சொன்னபடியே கூறினேன்"

## கோயில் ஐயர் கொலைவழக்கில் கோகிலாம்பாள்

சாவகச்சேரி, புதன்

"பொலிஸ் இன்ஸ்பெக்டர் எனக்குச் சொல்லித் தந்ததைத்தான் நான் மாஜிஸ்டிரேட்டிடம் வாக்குமூலமாக அளித்தேன். எனக்கு ஒன்றும் தெரியாது."

உருத்திரபுரம் கோயில் ஐயர் கொலை வழக்கு நேற்றுப் பிற்பகல் சாவகச்சேரி மாவட்ட நீதிபதி திரு. எம். எம். அப்துல் காதர் முன்னிலையில் மீண்டும் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபொழுது, கோகிலாம்பாள் மேற்கண்டவாறு கோர்ட்டில் கூறினர்.

"யாருடைய பயமுறுத்தல் காரணமாகவோ அல்லது உபகாரம் கிடைக்குமென்பதற்காகவோ; வாக்குமூலம் அளிக்கவில்லையென்றும், உண்மையை உரைக்கவேண்டுமென்பதற்காக தனது சொந்த விருப்பத்தின்படியே வாக்குமூலம் அளிப்பதாகவும் மூன்றாவது எதிரி கோகிலாம்பாள் தம்மிடம் வாக்குமூலம் அளிக்கும்பொழுது தெரிவித்தார்" என்று மாஜிஸ்டிரேட் திரு. ஏ. வைத்திலிங்கம் நேற்று சாவகச்சேரி கோர்ட்டில் சாட்சியம் அளித்தார். மாஜிஸ்டிரேட் திரு. வைத்திலிங்கம் சாட்சியமளித்த பின்னர் மூன்றுவது எதிரி கோகிலாம்பாள் எழுந்து தமக்கு ஒன்றும் தெரியாதென்றும் பொலிஸ் இன்ஸ்பெக்டர் சொல்லித்தந்ததைத்தான் தான் வாக்குமூலத்தில் கூறியதாகவும் சொன்னர்.

1962-ம் ஆண்டு டிசம்பர் 14ம் திகதி உருத்திரபுரத்தில் கோயில் ஐயர் காசிலிங்கசர்மாவைக் கொலை செய்ததாக முத்தர் வேலுப்பிள்ளை, ஆர். பசுபதி, கோகிலாம்பாள் ஆகியோர்மீது குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

முதலாவது எதிரி முத்தர் வேலுப்பிள்ளை சார்பில் திரு. ஏ. அமிர்தலிங்கம் திரு. ஆர். டி. சிவகுருவின் அனுசரணையுடனும், இரண்டாவது எதிரி ஆர். பசுபதி சார்பில் திரு. டி. கணேசலிங்கம் திரு. எல். செல்லத்தம்பியின் அனுசரணையுடனும் ஆஜரானர்கள். மூன்றுவது எதிரி கோகிலாம்பாள் சார்பில் எவரும் ஆஜராகவில்லை. கிளிநொச்சி பொலிஸ் இன்ஸ்பெக்டர் பொன்னுத்துரை வழக்கை நடத்தினர்.

பொலிஸ் இன்ஸ்பெக்டர் பொன்னுத்துரை வழக்கின் முக்கிய சாட்சியாக இருப்பதால் அவர் கோர்ட்டிற்குள் இருப்பதை இரண்டாவது எதிரியின் வழக்கறிஞர் திரு. டி. கணேசலிங்கம் ஆட்சேபித்தார். இவரின் ஆட்சேபணையை ஏற்றுக்கொண்ட நீதிபதி; இன்ஸ்பெக்டரை வெளியில் இருக்கும்படி கேட்டுக்கொண்டதன்பின் இன்ஸ்பெக்டர் வெளியில் சென்றார். அதன்பின் விசாரணை தொடர்ந்து நடைபெற்றது. இன்ஸ்பெக்டர், முன்னர் ஒரு தடவையும் எதிரியின் வழக்கறிஞரின் ஆட்சேபனை காரணமாக வெளியில் சென்றார்.

மேல் விசாரணை மே மாதம் 8-ம் திகதிவரை ஒத்திப்போடப்பட்டுள்ளது.

## அபராதம் ரூ. 100

தருமபுரம், புதன்

தருமபுரம் ஏழாம் யுனிட்டில் வசிக்கும்வெங்கடாசலம் வேலாயுதம் என்பவர் லைசென்ஸ் இல்லாமல் துப்பாக்கி உபயோகித்ததாக கிளிநொச்சி பொலிஸைச் சேர்ந்த திரு. கே. பொன்னுத்துரையால் குற்றம்சாட்டித் தொடரப்பட்ட வழக்கில் கிளிநொச்சி மாஜிஸ்டிரேட் திரு. வைத்திலிங்கம் எதிரியைக்குற்றவாளியாகக் கண்டு 100 ரூபா அபராதம் விதித்தார்.

## தபாற்கந்தோர் புதிய கட்டிடம்

யாழ்ப்பாணம், புதன்

யாழ்ப்பாணத் தபாற்கந்தோரின் புதிய கட்டிட வேலைகள் பூர்த்தியாகி இம்மாதம் 6-ந் திகதி அளவில் தந்திப் பகுதியாவது அக் கட்டிடத்தில் ஆரம்பிக்கப்பட்டு வேலைகள் நடைபெறும் என அறிவிக்கப்பட்டிருந்தது. ஆனல் இன்றுள்ள நிலையில் இன்னும் இருமாத காலமாவது செல்லும் என்று மராமத்து வேலைப்பகுதியினர் கருத்து தெரிவித்துள்ளனர்.

## "சீனர்கள் மோசமாக நடத்தப்படவில்லை"

### பீகிங் குற்றச்சாட்டுக்கு சாஸ்திரி மறுப்பு

புதுடில்லி, ஏப். 30

இந்தியாவில் காவலில் வைக்கப்பட்டிருந்த சீனக் கைதிகளை சீனவுக்குத் திருப்பி அனுப்புமுகமாக சென்னைக்குக் கொண்டுசெல்லும் வழியில், அவர்கள் மோசமாக நடத்தப்பட்டார்கள் என்ற பீகிங்கின் குற்றச்சாட்டை உள்நாட்டு மந்திரி திரு. லால்பகதூர் சாஸ்திரி மறுத்தார்.

விசேஷ ரயிலில் நல்ல இட வசதியுடன் அவர்கள் அனுப்பப்பட்டார்களென்றும் வைத்திய உதவியும், தாராளமான உணவும் அவர்களுக்களிக்கப்பட்டனவென்றும், ரயிலிலேயே உணவு தயாரிக்கப்பட்டதுடன் 2 டாக்டர்களும், 6 நர்ஸ்களும் உடன் அனுப்பப்பட்டார்கள் என்றும் அவர் கூறினர்.

அவர்கள் கப்பலில் ஏறுகையில் வீட்டு சாமான்கள் கடிகாரம், பேனு, குடும்பத்துக்கு ரூ. 1000 போதுமான நகைகள், இதர உடமைகள் யாவற்றையும் எடுத்துச் செல்ல அனுமதிக்கப்பட்டது என்றும் திரு. சாஸ்திரி கூறினர்.

சில குடும்பத்தினர் 20 முதல் 25 பெட்டிகள் வைத்திருந்தனர் என்றும், ஒவ்வொருவரும் ரூ. 666 எடுத்துச்செல்ல அனுமதிக்கப்பட்டனரென்றும் கூறிய சாஸ்திரி சொந்தக் கப்பலில் சொந்த நாட்டுக்குச் செல்வதால் அவர்களது பாஸ்போர்ட் திரும்பப் பெறப்பட்டதென்றும் சாஸ்திரி கூறினர்.

## பட்டினசபையின் சுகாதாரவிழா

காங்கேசன் துறை, புதன்

காங்கேசன் துறைப் பட்டினசபை ஜூன் மாத நடுப்பகுதியில் சுகாதார விழாவைக் கொண்டாட ஏற்பாடுகள் செய்து வருகிறது: இவ் விழாவை யொட்டி மாட்டு வண்டிச் சவாரிப் போட்டியும், சைக்கிள் ஓட்டப் போட்டியும் நடத்தப்பட விருப்பதாகத் தெரிகிறது. கூத்தியவத்தைப் பிள்ளையார் கோவிலடியில் மாட்டுவண்டிச் சவாரிப் போட்டி நடைபெறுமெனத் தெரிகிறது.

## கூட்டு ஸ்தாபனத்திற்கு லாபம்

கொழும்பு, புதன்

மட்பாண்டத் தொழில் கூட்டுறவு ஸ்தாபனம் சென்ற வருடம் அதிகப்படியாக வேறெந்த வருடத்தையும் விடப் பெருந் தொகையில் பொருட்களை உற்பத்தி செய்துள்ளது. 1962-ம் ஆண்டில் இவ்விதம் உற்பத்தி பெருகியதால் 342,000 ரூபா லாபமும் ஏற்பட்டுள்ளது.

1956-ம் ஆண்டில் தேசியமயமாக்கப்பட்ட மட்பாண்ட கூட்டுறவுஸ்தாபனம் 1958-ம் ஆண்டில் திருத்தி அமைக்கப்பட்டது. 1956-ம் ஆண்டு தொடக்கம் படிப்படியாக அதிகரித்து வந்தது. ஆனல் 1961-ம் ஆண்டில் உற்பத்தி குறைந்து காணப்பட்டு சென்ற வருடத்தில் கூடுதலாக அதிகரித்துள்ளது.

# 'வாழ்க்கைத்தரம் உயர தொழிற் ஸ்தாபனம் உதவும்'

## கவர்னர் ஜெனரல் உரை

கொழும்பு, புதன்

"சர்வதேச தொழில் ஸ்தாபனத்தின் ஆசிய கிளைக் காரியாலயம் இங்கு ஆரம்பிக்கப்பட்டதைத் தொடர்ந்து நமது மக்களின் வாழ்க்கைத்தரம் உயரும் என்பதில் எனக்கு சந்தேகமில்லை" என கவர்னர் ஜெனரல் திரு. வில்லியம் கோபல்லவா கிளைக்காரியாலயத்தைத் திறந்து வைத்து உரைநிகழ்த்துகையில் கூறினர்.

கொழும்பு ஹோட்டன் பிளேஸிலுள்ள காரியாலயத்தைத் திறந்துவைத்த கவர்னர் ஜெனரல் மேலும் கூறியதாவது:

தொழிலாளர்களின் வாழ்க்கைத்தரத்தை உயர்த்துவதே மிகவும் முக்கிய கடமையென ஆசிய மக்கள் உணர்ந்துள்ளார்கள். கைத்தொழில் உட்பட பிறதுறைகளில் முன்னேற்றம் கண்டு பொருளாதார நிலையை உயர்த்துவதாலேயே இது சாத்தியமாகும்.

### புதிய பிரச்னைகள்

கைத்தொழில் துறையில் இப்பொழுதுதான் நாம் காலடி எடுத்து வைத்திருக்கிறேம். எனவே நாம் பல புதிய பிரச்னைகளைச் சமாளிக்க வேண்டியிருக்கும்.

பிரதமர் தமது ஆசிச் செய்தியில், தியாகம்தான் பொருளாதார முன்னேற்றத்துக்கு வழிவகுக்கும் என்றும் சுயமுயற்சி முதலிடம் வகிக்க வேண்டுமென்றும் தெரிவித்திருந்தார்.

## கணக்காளர் ராஜினமா

காலி, புதன்

ஜின்தோட்ட 'பினைவுட்' கூட்டுறவு ஸ்தாபனத்தில் சில குழப்பங்கள் ஏற்பட்டுள்ளதாகத் தெரிய வருகிறது. கூட்டுஸ்தாபனத்தின் கணக்காளர் தான் பதவியிலிருந்து விலகுவதாக தந்தி மூலம் ஸ்தாபனத்தின் நிர்வாக சபைக்குத் தெரிவித்துள்ளதாக நம்பப்படுகிறது. மே மாதத்திலிருந்து தாம் பதவியிலிருந்து விலகவிருப்பதாக கணக்காளர் தந்தி மூலம் அனுப்பியிருந்தது நிர்வாக சபையால் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

# மவுண்ட்பேட்டன் பிரபு இந்தியா விஜயம்

புதுடில்லி, ஏப். 30

இன்று இந்தியா வந்த பிரிட்டிஷ் முப்படைத் தலைவர் ஏர்ள் மவுண்ட்பேட்டனை உப ராஷ்டிரபதி டாக்டர் ராதாகிருஷ்ணன், பிரதமர் நேரு, பாதுகாப்பு மந்திரி திரு. சாவன், முப்படைத் தலைவர்கள், பிரிட்டிஷ் ஹைகமிஷனர் திரு. தேஷ்முக் ஆகியோர் வரவேற்றனர்.

தனிப்பட்ட முறையில் தாம் இந்தியா வந்திருப்பதாயும், பிரிட்டிஷ் படைத் தலைவர் என்ற முறையில் சீன மிரட்டலை இந்தியா எப்படிச் சமாளிக்கிறது என்பதைக் காணத் தாம் ஆவல் கொண்டிருப்பதாயும் கூறிய மவுண்ட்பேட்டன் பிரபு, இந்தியாவுக்கு உடனடியாக உதவி செய்ய பிரிட்டனுக்கு வாய்ப்பக் கிடைத்தது பெரும் பாக்கியம் என்றும் கூறினர்.

இன்று மாலை ராஜ்காட்டிலுள்ள காந்திஜியின் சமாதியில் அவர்மலர் வளையம் வைத்தார். 4 நாள் டில்லியில் தங்கியபின் அவர் வருகிற வெள்ளிக்கிழமை ஏடன் செல்வார்.

## பாகிஸ்தான் படைகுவிப்பு

புதுடில்லி, ஏப். 30

திரிபுராவுக்கருகில் பாகிஸ்தான, படைகளைக் குவித்துவருவதாயும், சாலைகளும் முகாம்களும் அமைக்கப்படுகின்றன என்றும் அறிவிக்கப்படுகிறது.

## உயர்தர உத்தியோகஸ்தர் ராஜினமா

கொழும்பு, புதன்

இலங்கை பெட்ரோலியம் கார்ப்பரேஷனிலுள்ள 2 உயர்தர உத்தியோகஸ்தர்கள் சமர்ப்பித்துள்ள ராஜினமாவை ஏற்றுக்கொள்வதென டைரக்டர்கள் சபை தீர்மானித்துள்ளது.

நிர்வாக மனேஜர் திரு. ஜி. எஸ். பி. விதான பொருளாதார ஆலோசகர் திரு. ஜி. வி. எஸ். டி' சில்வா, ஆகிய இருவருமே ராஜினமா சமர்ப்பித்துள்ள இருவரும்.


இப்பொழுது திரையிடப்படுறது

சினிமாஸ் லிமிட்டெட்ஸ்தாபனத்தாரின் மகத்தான வெளியீடு

தென்னகத்தில் 100 நாட்களுக்கு மேல் ஓடி வெற்றியீட்டிய திரைக்காவியம்!

கிங்ஸ்லி (கொழும்பு) ரீளாஸா (வெள்ளவத்தை) வெலிங்டன் (யாழ்ப்பாணம்) விஜயா (மட்டக்களப்பு)

ஸ்ரீ கிருஷ்ண (திருமலை) மொடர்ன் (பண்டாரவளை) லக்ஷ்மி (இரத்தினபுரி) விஜிதா (ஹட்டன்) ஜெமினி (ராகலை)

★ மூன்று உள்ளங்களுக்கு இடையே ஒரு போராட்டம்
★ பாசத்திற்கும் காதலுக்கும் ஏற்பட்ட பயங்கர சோதனை

சிவாஜி கணேசன்
எஸ். எஸ். ராஜேந்திரன்
பி. சரோஜா தேவி
ஆர். விஜயகுமாரி
எம். ஆர். ராதா
வி. நாகையா
எம். வி. ராஜம்மா
பி. எஸ். வீரப்பா
புஷ்பலதா



நடித்த

— பி. எஸ். வி. பிக்சர்ஸ் —

ஆலய மணி

டைரக்ஷன் கே. சங்கர்

இசை விஸ்வநாதன் — ராமமூர்த்தி

மனேகரா (யாழ்ப்பாணம்)

சிவாஜி கணேசன், பி. பானுமதி நடித்த

மக்களைப் பெற்ற மகராசி


இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில்மேலை வீதி 53-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1963-ம் ஆண்டு [illegible] 2-ந் திகதி அச்சிட்டு [illegible]ப்பட்டது.